

# புரட்சித்தலைவியின் முழக்கம்

தொகுதி - 2
Volume - II





பூவையர் மகிழும் வண்ணம்
புதுமைகள் படைத்திடும் கதர்பட்டுப் புடவைகள்
அணியும் அழகே ஓர் ஆனந்தம்
அனைத்து
காதிகிராப்ட்
அங்காடிகளில் கிடைக்கும்
DIPR No.678/DIS/93/247
தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம்
குறளகம், சென்னை - 600 108

# உலகச் சிக்கன நாள்

## மாண்புமிகு முதல்வர் வாழ்த்துச் செய்தி



செலவுகளைக் குறைத்து சிக்கனத்துடன் வாழ்வது வீட்டிற்கும், நாட்டிற்கும் பொருந்துகிற ஒரு நடைமுறை தத்துவம் ஆகும். சிக்கனத்துடன் வாழ்ந்து சிறிய அளவிலேனும் சேமித்து வந்தால் நாம் சீருடனும், சிறப்புடனும் வாழ முடிவதோடு, திடீரென ஏற்படுகின்ற எதிர்பாராத செலவினங் களை ஈடுகட்டிக் கொள்கிற வசதியையும் பெற முடியும்.

தமிழக அரசின் சிறு சேமிப்புத் துறை, சாதாரண ஏழை எளிய மற்றும் நடுத்தர மக்களி டையே சேமிக்கும் பழக்கத்தைப் பரவச் செய்வ தோடு, செல்வந்தர்களும் சிறு சேமிப்பில் ஈடு பட்டு வருமான வரிச் சலுகையைப் பெற பல திட்டங்களை அமல்படுத்தி வருகிறது. சிறு சேமிப்பு மூலம் திரட்டப்படும் நிதி மாநில அரசு அமல்படுத்தும் மக்கள் நலத் திட்டங்களை நிறை வேற்றச் செலவிடப்படுகிறது. எனவே, சிறுசேமிப் பில் பங்கு கொள்ளும் ஒவ்வொருவரும் அரசின் நலத் திட்டங்களைச் செயல்படுத்த உதவுகின்றவர் என்கின்ற பெருமைக்குரியவர் ஆகிறார்கள்.

1992-93-ஆம் நிதியாண்டில் தமிழக அரசு, சிறுசேமிப்பில் நிர்ணயிக்கப்பட்ட குறியீட்டை மிஞ்சி வசூல் செய்து சாதனை படைத்துள்ளது கண்டு நான் பெருமிதம் அடைகிறேன். உலகச் சிக்கனநாள் அனுசரிக்கப்படும் இவ்வேளையில் தமிழக மக்கள் சேமிக்கும் பழக்கத்தைக் கைக் கொண்டு நாட்டின் விரைந்த பொருளாதார வளர்ச்சிக்குத் தங்களாலான பங்கை ஆற்றிட வேண்டும் என்ற எனது அவாவினை வெளிப் படுத்தி, தமிழகம் சிறு சேமிப்புப் பணியில் தொடர்ந்து முன்னணியில் இருக்க எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## இந்த இதழில்...


மகாராஷ்டிர மாநில நிலநடுக்கம்: மனிதாபிமானம் மலர்ந்தது! மலையென நிதி குவிந்தது! ... 2

'புரட்சித்தலைவியின் முழக்கம்' நூல் வெளியீட்டு விழா ... 4

படமும்-செய்தியும் ... 12

டாக்டர் ஜெ. ஜெயலலிதா 15 அம்சக் குழந்தைகள் நலத்திட்டம் ... 16

பண்ணை மகளிர் பயிற்சித் திட்டம் ... 17

நீர்ப்பிடிப்புப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் ... 19

இடுபொருட்கள் வழங்கும் விழா ... 21

பால்வளம் பெருக கால்நடைப் பராமரிப்பு ... 23

தோட்டக்கலை வளர்ச்சி ... 24

டாக்டர் மு. வரதராசனார் ... 27

அருங்காட்சியகம் உணர்த்தும் அரிய காட்சிகள் ... 31

தஞ்சை மண்ணில் தந்தை பெரியார் பிறந்தநாள் விழா ... 33

அன்னை சந்தியா

சிறுவர் உலகம் ... 42

மனநலம் ... 45

தமிழ்நாடு அரசுப் பணியாளர்களுக்கு அகவிலைப்படி உயர்வு ... 48



தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2024

ஐப்பசித் திங்கள் - 16

மலர்:24 இதழ்:9

1-11-1993

விலை: மூன்று ரூபாய்

மகாராஷ்டிர மாநில நில நடுக்கம்: மாண்புமிகு முதல்வர் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க

# மனிதாபிமானம் மலர்ந்தது!



மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர் திரு. துரை ராமசாமி அவர்கள்...



மாண்புமிகு வனத்துறை அமைச்சர் திரு. கே. லாரன்ஸ் அவர்கள்...



மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் திரு. கு.ப. கிருஷ்ணன் அவர்கள்...



மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு. கா.ப. பட்டாபிராமன் அவர்கள்...

மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர் திரு. டி. ஜனார்த்தனன் அவர்கள்...



மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. டி.எம். செல்வகணபதி அவர்கள்.



# மலையென நிதி குவிந்தது!



மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் திரு. எம். ஆனந்தன் அவர்கள்... மற்றும் 'தாட்கோ' நிறுவனத் தலைவர் திரு. வி.பி. துரைசாமி அவர்கள்...



மாண்புமிகு கதர்த்துறை அமைச்சர் திரு. பி. ஈஸ்வரமூர்த்தி அவர்கள்...



மாண்புமிகு மீன்வளத்துறை அமைச்சர் திரு. டி. ஜெயக்குமார் அவர்கள்...



மாண்புமிகு அரசுக் கொறடா திரு. எஸ். ஜெயக்குமார் அவர்கள்...

மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் திரு. எஸ். நாகூர் மீரான் அவர்கள்...



தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவன மேலாண்மை இயக்குநர் திருமதி சுலோசனா சம்பத் அவர்கள்



(தொடர்ச்சி 35-ஆம் பக்கம்)

# 'புரட்சித்தலைவியின் முழக்கம்'

மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் பதவி ஏற்று இரண்டாவது ஆண்டில்




பல்வேறு நிகழ்ச்சிகளில் தமிழில் ஆற்றிய உரைகளின் தொகுப்பு ''புரட்சித் தலைவியின் முழக்கம் - தொகுதி -2'' மற்றும் ஆங்கிலத்தில் ஆற்றிய உரைகளின் தொகுப்பு "Jayalalitha Speaks" Volume-II ஆகிய இரு நூல்களின் வெளியீட்டு விழா, 25.10.93 அன்று சென்னைக் கலைவாணர் அரங்கில் மிகச் சீரும் சிறப்புமாக நடைபெற்றது.

**மாநாடு போன்ற காட்சி!**

விழாவினையொட்டி கலைவாணர் அரங்கம் வண்ண மின் விளக்கு களால் அலங்கரிக்கப்பட்டிருந்தது. பன்னிறக் கொடிகள் அசைந்தாட பல திறத்தாரும் விழா மண்டபம் நோக்கித் திரள் திரளாகச் சென்ற காட்சி, ஒரு மாநாட்டைக் கண்முன் கொண்டு வந்து நிறுத்தியது போன்ற உணர்வையே ஏற்படுத்தியது!

விழா மேடை, வண்ண மலர் களால் நம் எண்ணம் கவரும் வகை யிலே எழிலுற அலங்கரிக்கப் பட்டிருந்தது.

ஆடவர் மகளிர் குழந்தைகள் என அனைவரும் வீற்றிருக்க, வெளி யீட்டு விழா வெகு சிறப்பாகத் தொடங்கியது.



செய்தி மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் திரு. இரா. சம்பத், இ.ஆ.ப., அவர்கள் அனைவரையும் வரவேற்றுப் பேசுகையில் - ''தமிழ் நாட்டு மக்களின் ஒப்பற்ற தலைவி புரட்சித்தலைவி அவர்கள் கடந்த இரண்டாண்டுக் காலத்தில் ஆற்றிய உரைகளின் தொகுப்பாக இன்று இரண்டு தொகுதிகள் வெளியிடப் படுகின்றன. அவரது பேச்சுக்கள், தமிழக மக்களுக்குச் செய்த, செய்யப் போகின்ற நன்மைகளைத் தெளி வாகக் கூறுகின்ற தொகுப்பாக விளங்குகின்றன'' என்றார்.



# நூல் வெளியீட்டு விழா

செய்தி-மக்கள் தொடர்புத்துறை உதவி இயக்குநர் (தமிழரசு) திரு. ஆர். பரதன் அவர்கள் நிகழ்ச்சிகளைத் தொகுத்து வழங்கினார்.

**பரவசமூட்டும் பட்டிமன்றம்:**

பிறபகல், பார்ப்போரைப் பரவசப்படுத்தும் பட்டிமன்றம் தொடங்கியது. தலைப்பு, ''புரட்சித்தலைவியின் முழக்கத்தில் விஞ்சி நிற்பது ... ஆட்சிச் சிறப்பே! அன்புப் பெருக்கே!'' என்பது. நடுவராக இருந்து நாவன்மை காட்டியவர் திரு. திருக்குறளார் வீ. முனிசாமி அவர்கள். அவர் பேசுகையில், ''மாண்புமிகு முதல்வர் அவர்கள், நிறைந்த அறிவும், படிக்க வேண்டும் என்கிற ஆர்வமும் உள்ளவர். அந்த வகையில் பார்த்தால் டாக்டர் அம்பேத்கர், சண்முகம் செட்டியார், டி.டி. கிருஷ்ணமாச்சாரி போன்றோருக்குப் பிறகு உயர்ந்த நூல் நிலையம் வைத்திருப்பவர் நமது முதல்வர் அவர்களே ஆவார். இந்த விழா நாட்டுக்கு, மக்களுக்கு, சமுதாயத்துக்குப் பயனுள்ள ஒரு விழாவாக விளங்குகிறது. மாண்புமிகு முதல்வர் அவர்கள் செய்த சாதனை நூலாக இதை வெளியிட்டிருக்கிறார்கள். இதை அனைவரும் வாங்கிப் படிக்க வேண்டும்'' என்றார்.

**ஆட்சிச் சிறப்பும் அன்புப் பெருக்கும்:**

'ஆட்சிச் சிறப்பே!' என்னும் அணித்தலைவர் பேராசிரியர் தி. இராசகோபாலன் அவர்கள் பேசுகையில் ''இந்தியாவுக்குள் தமிழகம் இருந்தது, மாண்புமிகு முதல்வர் அவர்கள் பொறுப்பேற்ற பிறகு, தமிழகத்திற்குள் இந்தியா இருக்கிறது!'' என்றார்.

''அன்புப் பெருக்கே!'' என்னும் அணித்தலைவர் பேராசிரியர் தெ. ஞானசுந்தரம் அவர்கள் பேசுகையில், ''ஆட்சி சிறப்பாக அமைந்திருக்கிறது என்றால், அதற்கு அன்பே அடித்தளமாக அமைகிறது. 'தமிழகத்துக்குள் இந்தியா இருக்கிறது' என்றார் பேராசிரியர் தி. இராசகோபாலன். தமிழகத்துக்குள் உலகத்தையே கொண்டு வந்த பெருமை மாண்புமிகு முதல்வருக்கு உண்டு!'' என்றார்.

பேராசிரியர் அசோக்குமரன் அவர்கள் பேசுகையில், ''மாண்புமிகு முதல்வர் அவர்களின் இந்த இரண்டு உரைத் தொகுப்புகளும் அரிய சொத்தாகும்'' என்றார்.



புலவர் பாலகிருஷ்ணன் அவர்கள் பேசுகையில், ''ஆட்சி சிறப்பாக நடைபெறுகிறதென்றால், அதற்குக் காரணம், அன்புதான்'' என்றார்.

டாக்டர் சுதாசேஷையன் அவர்கள் பேசுகையில், ''ஆட்சி சிறப்புதான், இத்தனைப் பேரையும் இங்கே வர வழைத்திருக்கிறது!'' என்றார்.

டாக்டர் சாரதா நம்பியாரூரன் அவர்கள் பேசுகையில், ''உறு பசியும் ஓவாப் பிணியும், செறுபகையும், நீக்க, மாண்புமிகு முதல்வர் அவர்கள் பாடுபடுகிறார்'' என்றார்.

இருசாராரின் வாதங்களைக் கேட்ட பட்டிமன்ற நடுவர் திரு.



# முத்தமிழ் போல் மூன்று நிகழ்ச்சிகள்!

ஒரே மேடையில் 25 அமைச்சர்கள்

● ஒரே மேடையில் 25 அமைச்சர்கள் பங்கேற்ற ஒரே நிகழ்ச்சி 'புரட்சித்தலைவியின் முழக்கம்' என்னும் நூல் வெளியீட்டு விழாவாகத்தான் இருக்க வேண்டும்.

விழா மேடையிலேயே விற்பனை!

● ஓர் அரசு நூல் வெளியீட்டு விழாவிலேயே ரூ.40,000-க்கு நூல்கள் விற்பனையான நிகழ்ச்சியும் இதுவாகத்தான் இருக்க வேண்டும்.

வெளியீட்டு விழாவில் பட்டி மன்றம்/கவியரங்கம்

● ஓர் அரசு நூல் வெளியீட்டு விழாவில், ஈடும் இணையுமற்ற இலக்கியவிழாவாகத் திகழ்ந்ததும் இந்த விழாவாகத்தான் இருக்கும் எனக் கருதப் படுகிறது.









திருக்குறளார் வீ. முனிசாமி அவர்கள் தீர்ப்பு வழங்குகையில், இரு அணியினரும் பேசிய பேச்சில் குறை எதுவும் இல்லை; நூற்றுக்கு நூறு சரியாகச் சொன்னார்கள்; இரு சாராரும் சமமாக ஆழ்ந்த கருத்துக்களை உணர்ந்து சொன்னார்கள். என்றாலும், புரட்சித்தலைவியின் முழக்கத்தில் விஞ்சி நிற்பது ஆட்சிச் சிறப்பே!'' என்றதும், குழுமியிருந்தோர் பலத்த ஆரவாரம் செய்தார்கள்.

**கருத்துமிகு கவியரங்கம்!**

பட்டிமன்றத்தைத் தொடர்ந்து, பாவலர்கள் பங்கேற்கும் பாட்டரங்கம் தொடங்கியது. ''சரித்திரத் தலைவியின் சாதனைச் சுவடுகள்'' என்னும் தலைப்பிலே சரம் சரமாய்க் கவிமாலை தொடுத்தார்கள் கவிஞர்கள்.

கவியரசர் இளந்தேவன் அவர்கள் தலைமை வகித்து, செவிக்கினிய செந்தமிழ்ப் பாடல்களை - செழுந்









# மாண்புமிகு முதல்வரின் வண்ணப்படங்கள் விழாவில் வழங்கப்பட்டன:

• படைப்புகளின் வெளியீட்டு விழாவில் படைப் பாளரின் உருவப்படங்களை வழங்கும் வகையில், மாண்புமிகு முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களின் அழகிய சின்னஞ் சிறு வண்ணப்படங்கள் இரண்டாயிரத்தை, மாண்புமிகு செய்தி-விளம்பரத்துறை அமைச்சர் திரு. மு. தென்னவன் அவர்கள் விழாவிற்கு வந்திருந்தவர்களுக்கு வழங்கினார்.










தேன் பாடல்களை, சூழ்ந்திருந்த சுவைஞர்களுக்குச் சுவையாக வழங் கினார்.

கவியரங்கச் சோலையில் பாடும் குயில்களாகப் பறந்து வந்தவர்கள் கவிஞர் வ. விசயரங்கன், கவிஞர் கரு. நாகராசன், கவிஞர் ஆண்டாள் பிரியதரிசினி, கவிஞர் மா.வே. பசுபதி, கவிஞர் விசாலி கண்ண தாசன் ஆகியோர். இவர்கள் முறையே கலை, கல்வி, தொழில், சமத்துவம், பெண்ணுரிமை என்னும் பாடுபொருள்களில் பாடி 'அம்மாடி!' என்று வியக்கத் தக்க அளவில் சொற் சிலம்பம் ஆடி னார்கள். அதைக்கேட்டு அவையோரும் அச்சிலம்ப ஒலியிலே சிந்தை மயங்கினார்கள்.

## இரு கண்களென இரு நூல்கள்:

இனிய மாலைப்பொழுது வந்தது!






## "அனைவரும் வாங்க வேண்டும்!"

• 'புரட்சித் தலைவியின் முழக்கம்' என்னும் இந்த நூலை செய்தித்துறை அழகிய முறையில் வெளியிட்டிருக்கிறது.

அச்சமைப்பு, கட்டுக்கோப்பு எல்லாமே மிக அருமையாக உள்ளது.

இந்த நூலின் அச்சமைப்பைப் பார்க்கும் போது, இதன் விலை அடக்கம் ரூ.60 அல்லது ரூ.65-க்கு விற்க வேண்டும். ஆனால், இதற்கு ரூ.15 என்றுதான் விலை வைத்திருக்கிறார்கள். ஆகவே, இந்த நூலை அனைவரும் காசு கொடுத்து வாங்கிப் படிக்க வேண்டும்.

அது மட்டுமல்ல, இந்த நூலை ஒட்டு மொத்தமாக வாங்கி, மற்றவர்களுக்கும் வழங்க வேண்டும்.

—மாண்புமிகு நிதியமைச்சர்
டாக்டர் நாவலர் அவர்கள்.

இதயமெலாம் கவரும் மாண்புமிகு முதல்வர் அவர்களின் உரைத் தொகுப்பு நூல்கள் வெளியிடும் அரிய நிகழ்ச்சியும் தொடர்ந்தது!

செய்தி-மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் திரு. இரா. சம்பத், இ.ஆ.ப., அவர்கள், அரங்கத்தில் குழுமியிருந்தோரை அன்புடன் வரவேற்றார். "புரட்சித்தலைவியின் முழக்கம் - தொகுதி-1 நூலைப் பார்த்த பல மாநிலத்தவரும் அதனை வெகுவாகப் பாராட்டினார்கள். அற்புதமாகத் தொகுக்கப்பட்டிருக்கிறது என்று கருத்துத் தெரிவித்தார்கள். அதன் அடிப்படையில் இன்று 2-வது தொகுதி வெளிவருகின்றது" என்று கூறினார். பிறகு இயக்குநர் அவர்கள் மேடையில் வீற்றிருந்த மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்குப் பொன்னாடை அணிவித்துச் சிறப்பித்தார்.

மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் திரு. சேடபட்டி இரா. முத்தையா அவர்கள் விழாவிற்குத் தலைமை வகித்தார். பிறகு இரு கண்களென மதிக்கத்தகும் இரு நூல்களின் வெளியீட்டு விழா நடந்தது.

புரட்சித் தலைவியின் முழக்கம் தொகுதி - 2 மற்றும் "Jayalalitha Speaks" Volume-II நூல்களை, மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் வெளியிட்டார். அவற்றின் முதல் பிரதிகளை, மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர் சேடபட்டி இரா. முத்தையா அவர்கள் பெற்றுக் கொண்டார். ஒரே மேடையில் இருபத்தைந்து அமைச்சர் பெருமக்கள் அமர்ந்திருந்தது கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது.



### படித்தேன்! சுவைத்தேன்!

முதலில், செய்தி-விளம்பரத் துறை அமைச்சர் திரு. மு. தென்னவன் அவர்கள் வாழ்த்துரை வழங்குகையில், "புரட்சித்தலைவியின் முழக்கம் என்னும் இந்த நூல்கள் கருத்துக் கருவூலமாக - சாதனைச் சரித்திரமாக விளங்குகின்றன. அவற்றையெல்லாம் படித்தேன் - படித் தேன் குடித்ததுபோல மகிழ்ந் தேன் - மலைத் தேன் - சுவைத்தேன் - மலைத்தேன்... ஆம். இந்த நூல்கள் ஒரு கருத்துச் சுரங்கம் என்றால் அது மிகையாகாது.






''மாண்புமிகு புரட்சித்தலைவி அவர்களின் பார்வை தொலை நோக்குப் பார்வை. அவர்களின் உரையிலே விவேகம், வீரம், நாட்டுப்பற்று, மனித நேயம் வள்ளல் தன்மை முதலான தன்மைகள் எல்லாம் நிறைய இருக்கின்றன. இந்த நூல்களை அனைவரும் படித்துப் பயன்பெற வேண்டும் என்பது என் பேரவா''. என்றார்.

**மக்கள் மனதில் இடம்பெற வேண்டும்!**

மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் திருமதி இந்திரகுமாரி அவர்கள் பேசுகையில் ''சொல்லுவதில் வல்லவனாகவும், மறதி இல்லாதவனாகவும், அஞ்சாதவனாகவும், ஒருவன் இருப்பின், அவனோடு




மாறுபட்டு வெல்வது யார்க்கும் அரிதாகும் - என்னும் திருக்குறளுக்கு ஏற்ப இந்த உரைகள் அமைந்திருக்கின்றன. இதில் பல் வேறு கருத்துக்கள் பொதிந்துள்ளன. இந்த நூல்கள் ஆறு கோடித் தமிழர்கள் கையிலும் இருக்க வேண்டிய அரிய நூலாகும். இது நூலகத்தில் மட்டுமல்ல, மக்கள் மனத்திலும் இடம் பெறவேண்டும்''. என்றார்.

**பெரியார் மாவட்ட மக்கள் கையில்...**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு கே.ஏ. செங்கோட்டையன் அவர்கள் பேசுகையில், ''இந்த உரை விளக்கம்






பெரியார் மாவட்டத்தில் உள்ள அத்தனைப் பேர் கையிலும் இருக்கும் என்பதைக் கூறிக்கொள்கிறேன்'' என்று குறிப்பிட்டு, மேடையிலேயே 20 ஆயிரம் ரூபாய் கொடுத்து இந்த நூல்களை மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களின் திருக்கரத்தால் பெற்றுக் கொண்டார். மாண்புமிகு வீட்டு வசதித் துறை அமைச்சர் திரு எஸ். ரகுபதி அவர்களும் ரூ.10,000 வழங்கி, நூல்களைப் பெற்றுக் கொண்டார்.

**அழியாத இலக்கியம்**

மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் திரு இராம. வீரப்பன் அவர்கள் பேசுகையில், ''இந்த நூல் கழகத்திற்கு மட்டுமல்ல, நாட்டு மக்களுக்கு, அனைத்து இந்தியாவுக்கே வழிகாட்டும் நூலாகும். இன்னும் 50 ஆண்டுகளுக்குப் பிறகு இந்த நூலைப் படித்துப் பார்க்கும் போது, புரட்சித்தலைவி அவர்கள் எவ்வளவு அறிவார்ந்தவராக, வீரப் பெண்மணியாக இருந்தார்? அவர் சொல்லாத கருத்து இல்லை, தொடாத துறையே இல்லை என்பதை இது, அழியாத இலக்கியமாகச் சொல்லும்.

''புரட்சித்தலைவி எதைச் சிந்தித்தாலும், அதில் மிகத் தெளிவாக இருப்பார். யாருக்கும் அஞ்சாத தெளிவோடு இருப்பார். அவர் பிறக்கும்போதே திருவாக - திருமகவாகப் பிறந்தார். இன்று வீரத் திருமகளாக விளங்குகிறார்'' என்றார்.




**புரட்சி மலர்**

மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் திரு எஸ்.டி. சோம சுந்தரம் அவர்கள் பேசுகையில், ''மாண்புமிகு முதல்வர் அவர்கள், பொதுநலப் பூங்காவில் பூத்திட்ட புரட்சி மலர், ஏழை எளியவர்



களைக் காக்க வந்த ஏற்றமிகு புரட்சித்தலைவி, ஈரோட்டுப் பாதையில் தேரோட்டும் புரட்சித் தலைவி, தமிழ்நாட்டின் இங்கர்சால், ஏழை எளிய மக்களின் துயரைத் தீர்த்து வைக்கும் அட்சயப் பாத்திரம்'' என்றார்.

**அர்த்தமுள்ள வார்த்தைகளின் தொகுப்பு**

மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர் திரு சேடபட்டி இரா. முத்தையா அவர்கள் பேசுகையில், ''அண்மையில் நடந்த சபாநாயகர்கள் மாநாட்டில், புரட்சித் தலைவி அவர்கள் ஆற்றிய ஆங்கில உரையைக் குறிப்பிட்டு, இந்த உரை இந்தியாவில் இருக்கிற அனைத்து மாநிலச் சட்டமன்றங்களிலும் வைக்கப்பட வேண்டும் என்று மாநாட்



டில் இடம்பெற்ற பலரும் கூறியதை நாம் இங்கே குறிப்பிட வேண்டும்.'' என்று கூறி, ''அர்த்தமுள்ள வார்த்தைகளின் தொகுப்புதான் இந்தப் புரட்சித்தலைவியின் முழக்கம்'' என்றார்.

மாண்புமிகு வணிகவரித்துறை அமைச்சர் திரு வி. சத்தியமூர்த்தி அவர்கள், 500 பிரதிகளுக்கான தொகையை, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களிடம் கொடுத்து நூல்களைப் பெற்றுக்கொண்டார்.

**எதையும் தாங்கும் இதயம் உள்ளவர்!**

பிறகு, மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டா நாவலர் இரா.நெடுஞ்செழியன் அவர்கள், விழாப் பேருரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

''இந்த அரசின் கொள்கை கோட்பாடு என்ன? எந்தத் திட்டத்தை இந்த அரசு வகுத்துள்ளது? எதைச் செயலாற்றி உள்ளது? என்பதற்கு விளக்கம் தரும் வகையில் இந்த நூல் அமைந்துள்ளது.











''அழகும் அறிவும் ஒருங்கே அமையப்பெற்றவர் நமது முதல்வர் அவர்கள் என்று டெல்லியில் நடை பெற்ற மாநாட்டில் ஒரு முதல்வர் பாராட்டினார். இந்த விழாவில் 26 அமைச்சர்களும் கலந்து கொண்டு இருக்கிறோம். ஏனென்றால் இந்த அமைச்சரவை பிணக்கு இல்லாத அமைச்சரவை. அகில இந்தியா விலும் உள்ள மாநிலங்களை ஒப்பிடும்போது புரட்சித்தலைவி யின் கீழ் உள்ள கட்டுப்பாடு, வேறு எங்கும் இல்லை.

''அண்ணா சொன்னது போல எதையும் தாங்கும் இதயம் புரட்சித் தலைவிக்கு உண்டு. ஒரு பெரியவர் தமிழ்நாட்டில் சட்டம் ஒழுங்கு கெட்டு விட்டது என்று கூறி இருக் கிறார். சட்டம் அப்படியே இருக் கிறது. ஒழுங்கும் ஒழுங்காக இருக் கிறது. சிறப்பாகச் செம்மையாக உள்ளது.''

**கலைக்கண்ணாடி!**

வெளியீட்டு விழா நிகழ்ச்சிக்குப் பிறகு, மாண்புமிகு முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களின் இரண்டாண்டுச் சாதனைகளை விளக்கிடும் வண்ணத் திரைப்படம் காண்பிக்கப்பட்டது. மக்கள் அதனை மிகவும் ரசித்துப் பார்த் தார்கள். விழா முடிவில், செய்தி மக்கள் தொடர்புத்துறை இணை இயக்குநர் திரு பா. செயப்பிரகாசம் அவர்கள் நன்றி நவின்றார்.

அன்றைய விழா, ஒரு சாதாரண விழாவாக அல்லாமல், சரித்திர நாயகியின் சாதனைகளை விளக்கும் திருவிழாவாக - பெருவிழாவாக விளங்கியது.

மாக்கடலிலிருந்து முத்தெடுத் தார்கள். இந்த நூல்கள், மக்கள் கடல் என்னும் மாபெருங்கடலுக்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் அளித்த முத்துகளாகும்.

இவை நம் உள்ளத்தை மட்டு மல்ல, இந்த உலகத்தையே தொடு கின்ற வகையிலே விளங்குகின்ற பாங்கினை இந்த விழாவிலே நாம் பார்க்க முடிந்தது.

பேரறிஞர் அண்ணா அவர்கள் சொல்வார்கள் - கற்பதிலே மூன்று வகை இருக்கிறது என்று. அதாவது, ''தமிழ்க் கவிதைகளை - தமிழ் நூல்களைக் கற்பது மூன்று வகை யில் - ஒன்று - நூலிலுள்ள அருமை பெருமை - நூல் நயம் - இலக்கணச் சுவை கண்டு, படித்து இன்பம் பெறுவது.

இரண்டு - அந்த இலக்கியத்தைப் பிறநாட்டு இலக்கியங்களுடன் ஒப் பிட்டு எந்தெந்த வகையில் அது உயர்ந்தது என அறிந்து பிறநாட் டாரும் உணரச்செய்வது.

மூன்று - அந்த ஏடுகளின் மூலம் இந்தச் சமுதாயத்திற்கு என்ன பயன் இருக்கிறது என்று ஆராய்ந்து சமுதாயத்திற்கு அதைத் தருவது.

பேரறிஞர் அண்ணாஅவர்களின் இந்தத் திருவாசகம், வெளிமிடப் பெற்ற நூல்களுக்கு மெத்தவும் பொருந்தும். அந்த வகையிலே இந்த இரு நூல்களும், காலக் கண்ணாடி யாக விளங்கும் என்பதில் சிறிதும் ஐயமில்லை!

**— நிகழ்ச்சித் தொகுப்பு: பி.வி. கிரி**



சென்னைக்கு வருகைதந்த மாண்புமிகு பிரதமர் பி.வி. நரசிம்மராவ் அவர்களை, சென்னை விமான நிலையத்தில் மாண்புமிகு முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் சந்தித்துப் பேசினார் (25.10.93).

மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களை, மாண்புமிகு மத்திய செய்தி மற்றும் ஒலிபரப்புத் துறை இணை அமைச்சர் திரு. கே.பி. சிங் தியோ அவர்கள், அவரது இல்லத்தில் சந்தித்தார். இந்தச் சந்திப்பின் போது மாண்புமிகு தமிழகச் செய்தி-விளம்பரத் துறை அமைச்சர் திரு. எம். தென்னவன் அவர்கள் உடனிருந்தார். (2.11.93)





# படமும் செய்தியும்

மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், மாண்புமிகு திரிபுரா முதலமைச்சர் திரு. தசரத் தேவ் அவர்களை, விஜயா மருத்துவமனையில் சந்தித்து உடல்நலம் விசாரித்தார் (15.10.'93).

மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களை, தேசிய பால்வள நிறுவனத்தின் தலைவர் டாக்டர் வி. குரியன் அவர்கள் தலைமைச் செயலகத்தில் சந்தித்து உரையாடினார். தேசிய பால்வள நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் டாக்டர் எம்.எஸ். அமிர்தா பட்டேல், மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர் திரு. டி. ஜனார்த்தனன், தலைமைச் செயலர், திரு. டி.வி. வெங்கடராமன், இ.ஆ.ப. ஆகியோர் உடனிருந்தனர் (14.10.'93).





மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களை தென் பிராந்திய ஜெனரல் ஆபீசர் கமேண்டிங், லெப்டினெண்ட் ஜெனரல் திரு. ஏ.எஸ். கல்கத் அவர்கள் சந்தித்தார். மேஜர் ஜெனரல் மூல்யா, தலைமைச் செயலர் திரு. டி.வி. வெங்கட ராமன், இ.ஆ.ப. ஆகியோர் உடனிருந்தனர் (14.10.'93).

மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களிடம், தலைமைச் செயலகத்தில் மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு. கே.ஏ. செங்கோட்டையன் அவர்கள், தமிழ்நாடு போக்குவரத்து நிதி நிறுவன - அரசுப் பங்குத் தொகையான ரூ.9 இலட்சத்திற்கான காசோலையை வழங்கினார் (14.10.93).





மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களிடம், தலைமைச் செயலகத்தில் மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் திருமதி ஆர். இந்திரகுமாரி அவர்கள், முதலமைச்சரின் திருக்கோயில் புனரமைப்பு மற்றும் பராமரிப்பு நிதிக்காக ரூ.5 இலட்சத்திற்கான காசோலையை வழங்கினார் (14.10.'93).

மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், மறைந்த மயிலாப்பூர் சட்டமன்ற உறுப்பினர் திரு. டி.எம். ரெங்கராஜன் அவர்களின் துணைவியார் திருமதி. மாலதி ரெங்கராஜன் அவர்களிடம் ரூ.50,000-க்கான காசோலையை வழங்கினார் (29.10.93).





# டாக்டர் ஜெ. ஜெயலலிதா 15 அம்சக் குழந்தைகள் நலத்திட்டம்

தமிழ்நாட்டிலுள்ள குழந்தைகளின் நல்வாழ்விற்காக, சமூகநலத் துறையின் மூலம் 14 சீரிய திட்டங்களும், மக்கள் நல்வாழ்வுத் துறையின் மூலம் மாண்புமிகு முதல்வர் அவர்களால் அண்மையில் அறிவிக்கப்பட்ட **"புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா இருதய அறுவைச் சிகிச்சைத் திட்டமும்"** உட்பட மொத்தம் 15 அம்சங்கள் கொண்ட ஒரு புதிய திட்டத்தை தமிழக அரசு செயலாக்க உள்ளது. அத்திட்டத்திற்கு **"டாக்டர் ஜெ. ஜெயலலிதா 15 அம்ச குழந்தைகள் நலத்திட்டம்"** எனப் பெயரிடப்பட்டுள்ளது. இப்புதிய திட்டம் தமிழக மழலைச் செல்வங்களின் வளமான வாழ்வுக்கும், சிறந்த எதிர்காலத்திற்கும் அடிகோலும்.

1. பிறக்கும் குழந்தைகளின் சராசரி பிறப்பு எடையை மூன்று கிலோவாக உயர்த்துதல்.

2. முறையான தடுப்பு ஊசி அளித்து, குழந்தைகளுக்கு வரும் போலியோ மற்றும் வலிப்பு நோய் போன்ற நோய்களை முற்றிலும் அகற்றுதல்.

3. ஐந்து வயதுக்குக் கீழுள்ள குழந்தைகளைத் தாக்கும், வயிற்றுப்போக்கு, நுரையீரல் சம்பந்தமான தொற்று நோய் ஆகியவற்றினால் ஏற்படும் இறப்பினைக் குறைத்து, இளம்சிறார் இறப்பு விகிதத்தை 30 சதவீதத்திற்கும் கீழாகக் குறைத்தல்.

4. குழந்தைகளின் ஊட்டச் சத்தினை அதிகப் படுத்துதல்.

5. வைட்டமின்-ஏ சத்துக்குறைவு, அயோடின் சத்துக்குறைவு மற்றும், சோகை நோய் ஆகியவற்றிலிருந்து குழந்தைகளைக் காத்தல்.

6. அனைத்து மருத்துவமனைகளை மற்றும் தாய்-சேய் நல விடுதிகளை, குழந்தைகள் நலத் திட்டத்திற்கு உகந்த வகையில் நடத்திச் செல்லுதல்.

7. பெண்களின் திருமண வயதினை 21-ஆக உயர்த்தியும், ஒவ்வொரு குழந்தைப் பிறப்புக்கும் இடையில், 3 ஆண்டுகள் இடைவெளி இருக்க வேண்டியதன் அவசியத்தைக் கையாள்வதை மகளிரிடையே பரப்பியும் பெண்கள் பிள்ளைப் பிறப்பு இயந்திரங்கள் போல் கருதப்படுவதிலிருந்து அவர்களுக்கு விடுதலை அளித்தல்.

8. சட்டத்தின் துணை கொண்டும், பிரச்சாரம் மூலமாகவும் ஒவ்வொரு குழந்தைக்கும் குறைந்த பட்சம் 5 ஆண்டுகளாவது தொடக்கக் கல்வியை அளித்து, அதனைப் பரப்புதல்.

9. மகளிரின் எழுத்தறிவையும், தகுதியையும் உயர்த்துதல்.

10. குழந்தைகள் மையங்களில் தூய்மையான குடிநீர் மற்றும் சுகாதார வசதிகளை ஏற்படுத்தித் தருதல்.

11. 'இளம் சிறார் தொழிலாளர்கள்' நடைமுறையினைப் படிப்படியாகக் குறைத்தல்.

12. பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டத்தினைப் பரவலாக்குதல்.

13. 'பெண் சிசு வதை' என்னும் சமூகக் கொடுமையினை முற்றிலுமாகத் தமிழ்நாட்டிலிருந்து அகற்றுதல்.

14. குழந்தைகளுக்கு ஏற்படும் உடல் ஊனங்களை ஆரம்ப நிலையிலேயே கவனித்து, அவர்களுடைய மறுவாழ்வுக்கு வித்திடல்.

15. 'குழந்தைகள் இலவச இருதய அறுவைச் சிகிச்சைத் திட்டத்தை'ச் செயல்படுத்துதல்.

மேற்கண்ட அம்சங்களைக் கொண்டு விளங்கும் "டாக்டர் ஜெ. ஜெயலலிதா 15 அம்சக் குழந்தைகள் நலத்திட்டம்" என்ற திட்டத்தினை மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் வருகின்ற 11.11.1993 அன்று, சென்னை கலைவாணர் அரங்கில் தொடங்கி வைக்க அன்புடன் இசைந்துள்ளார்கள்.



# பண்ணை மகளிர் பயிற்சித் திட்டம்

# டான்வா

டான்வா எனப்படும் பண்ணை மகளிர் பயிற்சித் திட்டம் டென்மார்க் நாட்டின் உதவியுடன் மனித வளத்தைப் பெருக்கி அதன் மூலம் வேளாண்மையை முன்னேற்றுவதில் பெரும் பங்கு வகிக்கும் ஒரு திட்டமாகும்.

பண்ணை மகளிரை ஊக்குவித்து, உதவி செய்து, வழிகாட்டி அதன் மூலம் நிர்வாகத் திறமை பெற்று, வேளாண்மையில் முழுத் திறமையுடன் பங்கெடுத்து, தொழில் நுட்பங்களை ஆர்வத்துடன் செயல்படுத்தி அதிக மகசூலும், வருவாயும் பெற வழிவகுப்பதற்கென்றே இவ் விரிவாக்கத் திட்டம் தீட்டப்பட்டுள்ளது. இத் திட்டம், தமிழ்நாட்டில் செங்கை எம்.ஜி.ஆர். தென்னார்க்காடு, தஞ்சாவூர், புதுக்கோட்டை, திருநெல்வேலி கட்டபொம்மன் மற்றும் இராமநாத புரம் மாவட்டங்களில் திறம்படச் செயல்பட்டு வருகின்றது.

**குறிக்கோள்:**

**நீண்ட காலக் குறிக்கோள்**

—வேளாண்மை வளர்ச்சியை அதிகப்படுத்துதல்;

—சமுதாயத்தில் பண்ணை மகளிரின் நிலையை மேம்படுத்துதல்;

—சிறு குறு விவசாயப் பண்ணை மகளிரை முழுத்திறமையுடன் செயல்பட வைத்து, உற்பத்தியைப் பெருக்கி அதன் மூலம் குடும்பத்தின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துதல்.

**குறுகிய கால நோக்கங்கள்**

—பண்ணை மகளிருக்குப் புதுத் தொழில் நுட்பங்களை எடுத்துரைத்தல்,

—பண்ணை மகளிருக்குச் செயல் விளக்கப் பயிற்சிகள் மூலம் பயிற்சியளித்து, தொழில் நுட்பங்களைச் செயல்படுத்தத் தூண்டுதல்.

—பயிற்சி பெற்ற பண்ணை மகளிர் தாங்கள் கற்றவற்றைப் பயிற்சி பெறாத மகளிருடன் பகிர்ந்துகொள்ள ஊக்கமளித்தல்;

**திட்டம் செயல்படும் முறை:**

இத்திட்டத்தில் முதல் 1½ ஆண்டுகள் பணியாளர்களை நியமித்தல், அலுவலகக் கட்டடம் கட்டுதல் போன்ற ஆரம்பப் பணிகளுக்கு ஒதுக்கப் பட்டுள்ளது. இரண்டாவது கட்டமான 3½ ஆண்டுகள் திட்ட செயல்பாட்டிற்கென்றும், மூன்றாவது கட்டமான 2½ ஆண்டுகள் திட்ட ஆய்வுக்கெனவும் ஒதுக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் செயல்பட 3.21 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது.

இரண்டாவது கட்டமான திட்ட செயல்பாடு 1988-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் செயல்படத் துவங்கியது. 1988-89-ஆம் ஆண்

டில், 18 கிராம அளவிலான வேளாண்மைத் தொழில் நுட்பப் பயிற்சிகள் நடத்தப்பட்டன.

1989-90-ஆம் ஆண்டில் 16 கிராம அளவிலான வேளாண் பயிற்சி மூலம் 480 பண்ணை மகளிருக்கும், 1990-91-இல் 479 பண்ணை மகளிருக்கும் 1992-93-இல் 360 பண்ணை மகளிருக்கும் பயிற்சி அளிக்கப்பட்டது.

மேலும் நடப்பு ஆண்டில் பல்பெருக்கு நோக்குத் திட்டம் செயல்படுத்தப்பட்டது. இத் திட்டத்தின் படி ஏற்கெனவே பயிற்சி பெற்ற பண்ணை மகளிரில் ஓர் உதவி வேளாண்மை அலுவலர் பகுதியில் 10 பண்ணை மகளிர் வீதம் 10 உதவி வேளாண்மை அலுவலர் பகுதிகளிலிருந்து 100 பண்ணை மகளிர் தேர்ந்தெடுக்கப்பட்டு மூன்று கட்டமாக பல்பெருக்கு நோக்குத் திட்டப் புத்தறிவுப் பயிற்சி நடத்தப்பட்டது. அவர்கள் மூலம் பயிற்சி பெறாத மகளிர், ஒரு பயிற்சியாளருக்கு ஐவர் வீதம் 500 பேர்கள் பயிற்றுவிக்கப்பட்டனர்.

மேலும் 1992-93- ஆண்டில் காளான் வளர்ப்பு, கோழி வளர்ப்பு, வேளாண் காடுகள் மற்றும் பால் மாடு பராமரிப்பு சிறப்புப் பயிற்சிகள் நான்கு அணிகளுக்கு வழங்கப்பட்டு அதன் மூலமாக 116 மகளிர் பலன் அடைந்துள்ளார்கள்



பண்ணை மகளிர் கருத்தரங்கு மூலம் 150 பண்ணை மகளிர்களுக்கு ஒரு நாள் சிறப்புப் பயிற்சி அளித்து பண்ணை மகளிர்கள் தொழில் நுட்பங்களைக் கடைப்பிடிப்பதில் உள்ள இடையூறுகளை ஆராய்ந்து அதனை நிவர்த்தி செய்ய வழி வகைகள் எடுக்க; பண்ணை கருத்தரங்கு நடத்தப் பட்டுள்ளது.

இதுவரை 2500 பண்ணை மகளிருக்குப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டிலிருந்து ஒரு பயிற்சியாளருக்கு ரூ.25 வீதம் வழங்கப்படுகிறது.

1993-94 முதல் இந்தத் திட்டம் மேலும் 6 மாவட்டங்களுக்கு விரிவுபடுத்தப்படும்.

நெல்லை மாவட்டத்தில் தற்போது செயல்படுத்தப்பட்டுவரும் பண்ணை மகளிர் பயிற்சித் திட்டம் குறித்து திருநெல்வேலி அருகாமையிலுள்ள சித்தன் குடியிருப்புப் பகுதியில் இந்தத் திட்டத்தின்கீழ் பயிற்சி பெற்று வரும் மகளிர் சிலரைச் சந்தித்தோம். அப்போது அவர்கள் கூறியதாவது:



**திருமதி மனோன்மணி (வயது 33)**

இவர் எஸ்.எஸ்.எல்.சி. வரை படித்திருக்கிறார். இவருடைய கணவரும் விவசாயம் செய்கிறார். இவர்களுக்கு 2 ஏக்கர் நன்செய் நிலம் உள்ளது. 1989-முதல் இவர் இந்தத் திட்டத்தின்கீழ் பயிற்சி பெற்று வருகிறார். பயிற்சி பற்றிக் கேட்டதற்கு, வாரத்தில் 5 நாட்கள் காலை 10 மணி முதல் மாலை 5 மணி வரை தொடர்ந்து பயிற்சி அளிக்கப்படுவதாகவும், அந்தந்தப் பருவ காலங்களுக்கு ஏற்பச் சிறப்புப் பயிற்சி அளிக்கப்படுவதாகவும் கூறினார்.

இந்தப் பயிற்சியினால், நவீன விவசாய முறை பற்றியும் விதை நேர்த்தி, அறுவடை நுட்பங்கள் போன்ற விவசாய நுணுக்கங்கள் பற்றியும் தெரிந்து கொண்டதாகவும், மேலும் குறைந்த செலவில் அதிக மகசூல் பெறுவது பற்றித் தெரிந்து கொண்டதாகவும் ஆர்வத்தோடு கூறினார்.

**திருமதி பரிபூரணம் (வயது 40)**

நெல் நாற்று பரவுதல், விதை கலக்கி விதை பரவுதல் தண்ணீரில் நனைய வைத்தல் போன்ற விவசாய நுணுக்கங்களில் இவர் சிறப்புப் பயிற்சி பெற்றுள்ளார். 1 ஏக்கரில் பயிர் செய்வதாகவும், ஒரு ஏக்கருக்கு முன்பு அதிகமாக யூரியா போட்டதாகவும் பயிற்சிக்குப் பிறகு சரியாக யூரியா உபயோகிப்பதால் மகசூல் அதிகமாகக் கிடைப்பதோடு செலவும் குறைந்திருப்பதாகவும் கூறினார். மேலும், தற்போது களைக் கொல்லி மருந்து வாங்கிப் பயன்படுத்துவதாகவும் பயிர்களுக்கு மருந்து அடிக்கடி போடக் கற்றுக் கொண்டதாகவும் தெரிவித்தார்.

**திருமதி கரோலின் (விவசாய அலுவலர்)**

உண்மையிலேயே விவசாயத்தில் ஈடுபட்டிருக்கும் மகளிருக்குத்தான் பயிற்சி அளிக்கப்படுகிறது. 20 முதல் 45 வயது வரை உள்ள மகளிரே பயிற்சிக்குத் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். பயிற்சிக்குக் கல்வித் தகுதி முக்கியமில்லை. சிறிய மற்றும் நடுத்தர விவசாயிகளுக்கே இந்தப் பயிற்சி தரப்படுகிறது. ஒரு உதவி வேளாண் அலுவலருக்கு ஒரு பயிற்சியாளர் வீதம் ஆண்டில் மொத்தம் 16 பயிற்சியாளர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது. ஒரு பயிற்சியாளர் 30 பண்ணை மகளிருக்குப் பயிற்சி கொடுப்பார்.

150 பயிற்சியாளர்களுக்கு ஆண்டில் ஒரு முறை சிறப்பு மாநாடு நடத்தப்படும். மாநாட்டிற்கு நல்ல வரவேற்பு இருக்கிறது. ஒரு வட்டம் (Block) முடிந்த பிறகு அடுத்த வட்டத்தில் டான்வா பயிற்சி தொடங்கப்படுவதாகவும் கூறினார் இவர்.

—ஜே.சி.



# நீர்ப்பிடிப்புப் பகுதி மேம்பாட்டுத் திட்டம்

திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டத்தில் தமிழ்நாட்டிலேயே மழை குறைவாகப் பெய்யும் பகுதி யாகும். அத்துடன் காலம் தவறிப் பெய்யும் மழையினால் வேளாண்மை மிகவும் பாதிக்கப்படுகிறது. அதிவேகமாக வீசும் காற்றினால் மண் அரிப்பு ஏற்படுவதுடன் மண்ணின் ஈரப்பதமும் விரைவில் குறைந்து விடுகிறது. இந்தக் காரணங்களினால் ஆயிரக்கணக்கான ஏக்கர் புஞ்சை நிலங்கள் தரிசாகவே உள்ளன.

இம்மாதிரி தரிசாக உள்ள ஆயிரக்கணக்கான ஏக்கர் புஞ்சை நிலங்களைப் பெருக்கவும், அதன் மூலம் வருவாய் பெற்றிடவும் வேண்டி, தமிழ்நாடு அரசு, வேளாண்மைப் பொறியியல் துறையின் மூலம் ''விரிவான நீர்ப்பிடிப்புப் பகுதி மேம்பாட்டுத் திட்டம்'' ஒன்று தயாரித்து, மத்திய அரசின் அங்கீகாரத்தையும் பெற்றது. இதற்காக நிதி உதவியினைச் செய்ய 'டென்மார்க்' நாடு முன் வந்துள்ளது.

இத்திட்டம் 1.4.91 முதல் செயல்படுத்தப்படுகிறது.

''விரிவான நீர்ப்பிடிப்புப் பகுதி மேம்பாட்டுத் திட்டம்'' நான்கு உபதிட்டப் பகுதியாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

சிற்றாறின் தென்பகுதியில் தென்காசி, திருநெல்வேலி, அம்பாசமுத்திரம் ஆகிய வட்டங்கள் சந்திக்கும் பகுதியில் 5000 எக்டேர் பரப்பில் ஒரு துணை நீர்ப்பிடிப்புப் பகுதி தேர்ந்தெடுக்கப்பட்டு செயலாக்கப் படுகிறது.

இந்த நீர்ப்பிடிப்புப் பகுதியில் நிலத்தின் தன்மைக்கு ஏற்றவாறு, பாசன நீர் கிடைக்கும் ஆதாரத்தின் அடிப்படையிலும் மழை நீர் சேமிப்புப் பணிகள், மண் ஈரப்பதம் காக்கும் பணிகள் ஆகியவை செயல்படுத்தப் படுகிறது.

இந்தப் பணிகளுக்கு ஆகும் செலவினத்தில் 70 சதவிகித மானியமாகவும், மீதமுள்ள 30 சதவிகித கடனாகவும் அளிக்கப்படும். இந்தக் கடன், திட்டம் நிறைவேறிய 2 ஆண்டுகளுக்குப் பின் 10 ஆண்டுகளில் சம தவணைகளில் திரும்பப் பெறப்படும்.

கசிவு நீர்க்குட்டை அமைத்தல், தடுப்பணைகள் கட்டுதல், ஊரணி ஆழப்படுத்துதல் போன்ற பணிகள் அரசு செலவிலேயே நிறைவேற்றப் படும்.

இத்திட்டத்தில் பண்ணைக்காடுகள், மேய்ச்சல் நிலம் மேம்பாடு, பலன் தரும் மரம் மற்றும் பழ மரங்கள் வளர்ப்பு போன்ற பணிகளுக்கு எக்டேருக்கு ரூ.1,200 வீதம் மானியம் வழங்கப்படும். 10 எக்டேருக்கு ஒரு குழாய்க் கிணறு வீதம் அமைத்து, இலவசமாக கைப்பம்புப் பொருத்தப்படும்.

இத்திட்டத்தை நிறைவேற்ற, சிற்றாறு நீர்ப்பிடிப்பில் 3000 எக்டேர் பரப்பளவு கொண்ட துணை நீர்ப்பிடிப்புப் பகுதி தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளது.

காற்றினால் ஏற்படும் மண் அரிப்பைத் தடுக்க, காற்றின் திசைக்குக் குறுக்கே மரங்களை வளர்க்கும் முறைக்கு 'தாவர அரண்' என்று பெயர். இம் மாதிரி தாவர அரண்கள் அமைந்து மண்ணின் ஈரப்பதம் காக்கவும் காற்றினால் ஏற்படும் மண் அரிப்பிலிருந்து தரிசு நிலங்களைப் பாதுகாத்துப் பயன் பெறுவதற்கும் இத்திட்டம் நிறைவேற்றப்பட உள்ளது. இத்திட்டத்தில் மேய்ச்சல் நிலம் மேம்பாடுக்காகவும் வழி வகை செய்யப்பட்டுள்ளது.

இப்பணிக்கு ஆகும் மொத்தச் செலவினமும் அரசு மானியமாகக் கருதப்படும்.

திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டத்தில் ராதாபுரம் வட்டத்தில் மணல் மேடிட்ட தேரி நிலங்களில், வேளாண்மைப் பொறியியல் துறை மூலம் ஏற்கெனவே அமைக்கப்பட்ட 330 கி.மீ. நீளமுள்ள தாவர அரண்களைச் செம்மைப் படுத்தி, பராமரித்திட இத்திட்டம் செயல்பட உள்ளது. இதனால் 6000 எக்டர் பரப்பு நிலம் பயன் பெறும்.

இத்திட்டத்திற்காகும் மொத்தச்

செலவும் அரசு மானியமாகக் கருதப் படும்.

ராதாபுரம் தாலுகாவில், பயிர் செய்யக்கூடியதும் ஆனால் தரி சாகவே விடப்பட்டதுமான 3000 எக்டேர் பரப்பில் புதிதாகத் தாவர அரண்கள் அமைக்கப்பட உள்ளன, இதற்காகும் செலவுகள் அனைத்தும் அரசு ஏற்றுக் கொள்ளும். தாவர அரண்களுக்கு இடைப்பட்ட பரப் பில் பழமரக்கன்றுகள் இதர மரக் கன்றுகள் வழங்கிட ஒரு எக்டேர் பரப்பிற்கு ரூ.1,200 மானியமாக வழங்கப்படும். புதிதாகக் கசிவு நீர்க் குட்டைகள் அரசின்முழுச் செலவிலே அமைத்திடவும் திட்டமிடப்பட்டு உள்ளது. மேய்ச்சல் நிலம் மேம் பாட்டுக்காகவும் இத்திட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ளது.

1. தரிசு நிலங்களில் மழையினா லும், காற்றினாலும் மண் அரிப்பை மேலும் ஏற்படாமல் தடுப்பது.

2. தரிசு நிலங்களின் தன்மைக் கேற்ப, மேம்பாட்டுப் பணிகள் மேற்கொண்டு அந்த வகை நிலங் களிலிருந்தும் வருமானம் கிடைக்க வகை செய்தல்.

3. விவசாயிகளுக்கு ஏற்புடையதும், பலனளிக்கக் கூடியதுமான புதிய விவசாய முறைகளைக் கடைப்பிடிக் கக் கூறுதல்.

4. நிலத்தின் தன்மைக்கேற்பவும், வருவாய் வரும் வகையிலும் புதிய தொழில் நுட்பங்களைத் தெரிவித்து அதனால் ஏற்படும் கூடுதல் ஆதாயங் களைப் பற்றிய விழிப்புணர்வை, விவசாயிகளின் மத்தியில் ஏற்படுத்து தல்.

5. இத்திட்டத்தின் கீழ் வரும் தாவர அரண்களுக்கு இடைப்பட்ட நிலச் சொந்தக்காரர்களும், புஞ்சைப் பகுதி விவசாயிகளும் தீவிர விவ சாயம் செய்து வேளாண்மையில் மேம்பாடு அடைய உரிய இடு பொருட்கள் அவர்களுக்கு கிடைக்க வழி செய்தல்.

6. தற்போது தரிசு நிலம் சொந்த மாக வைத்திருந்து அதில் எந்தவித வேளாண்மையும் செய்யாமல் இருக் கும் நிலச் சொந்தக்காரர்களுக்கு, நீண்ட கால அடிப்படையில் வேலை கிடைக்கும் வாய்ப்புகள் ஏற்படுத்து தல்; அத்துடன் நிலமற்ற கூலி வேலையாட்களுக்கும், குறு விவ சாயிகளுக்கும் அன்றாடம் வேலை கிடைக்கவும் வழி வகை செய்தல்.

### பருவ மழை

நெல்லை மாவட்டம் தென்மேற்கு மற்றும் வடகிழக்கு ஆகிய இரு பருவ மழைகளினாலும் பயன்பெறுகிறது. ஜூன் முதல் செப்டம்பர் வரை பெய்யும் தென்மேற்குப் பருவ மழையினால் அம்பாசமுத்திரம் திருநெல்வேலி, பாளையங் கோட்டை போன்ற இடங்களும் சிவகிரி, நான்கு நேரி வட்டாரங்களில் சில பகுதிகளும் பாசனத் திற்குக் கணிசமாக நீரைப் பெறுகின்றன. அக்டோபர் முதல் டிசம்பர் திங்கள் வரை பெய் யும் வடகிழக்குப் பருவ மழையினால் இந்த மாவட்டம் முழுவதும் பாசனத்திற்கான தண்ணீ ரைப் பெறுகிறது.

நெல்லை மாவட்டத்தின் சராசரி மழை அளவு 814.8 மி.மீட்டர் ஆகும்.

நெல்லை மாவட்டம் ஆலங் குளம் ஒன்றியத்தில் தரிசு நிலங் களில் மரங்கள் எவ்வாறு வளர்க்கப் படுகின்றன என்பதை விவசாயி களுக்கு விளக்க ஒரு எக்டேர் நிலப் பரப்பில் ஒரு மாதிரிப் பண்ணை (Observation Plot) உருவாக்கப்பட்டது. இந்த மாதிரி தோட்டத்துக்கு அரசு, ஆண்டுக்கு ரூ.12 ஆயிரம் வீதம் 3 ஆண்டுகளுக்கு ரூ.36 ஆயிரம் மானியம் வழங்குகிறது. மாவட்டத் தின் மற்ற பகுதிகளிலிருந்து விவசாயிகள் இங்கு அழைத்து வரப் பட்டு பார்வையிட வசதிகள் செய்து தரப்படுகிறது.

'டென்மார்க்' அரசு 15 வருட கால இடைவெளியில் 3 கட்டங் களில் நீர்ப்பிடிப்புப் பகுதி மேம் பாட்டுத் திட்டங்களை நிறை வேற்றிட உதவிகள் செய்ய முன் வந்துள்ளது. அதன் முதல் கட்டமாக 1.10.91 முதல் 1.4.94 வரை 3½ வருடத்தில் முதல் 6 மாத காலம் துவக்கப்பணிகள் செய்யவும் மீத முள்ள 3 வருடம் திட்டம் நிறை வேறும் காலமாகவும் நிர்ணயிக்கப் பட்டுள்ளது.

17,500 எக்டேர் பரப்பில் 3½ வருடத்தில் முதல் கட்டப்பணிகள் நிறைவேற்றிட அரசு ரூ.6.47 கோடி ஒதுக்கியுள்ளது.

இந்தத் தொகையில், டென்மார்க் நாடு 'டானிடா' (டென்மார்க் சர்வதேச மேம்பாட்டு முகமை) என்ற உதவித் திட்டத்தின் மூலம் ரூ.6.25 கோடி வழங்குகிறது. மீத முள்ள 0.22 கோடி தமிழ்நாடு அரசு ஒதுக்கீடு செய்துள்ளது.

**'விரிவானநீர்ப்பிடிப்புப் பகுதி மேம் பாட்டுத் திட்டம்' - இரண்டாவது கட்டம்**

நெல்லை மாவட்டத்தில் டானிடா நிறுவன உதவியுடன் செயல்படுத்தப் படும் 'விரிவானநீர்ப்பிடிப்புப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்' இரண் டாம் கட்டப் பணிகள் 1.4.1994 முதல் செயல்படுத்தப்படும் என எதிர்பார்க்கப்படுவதாக இந்தத் திட்டத்தின் மேற்பார்வைப் பொறி யாளர் திரு என். சத்தியதாஸ் தெரி வித்தார். இந்தத் திட்டம் ரூபாய் 45 கோடி செலவில் 7 ஆண்டுகள் செயல்படுத்தப்படும். இதன்மூலம் 55 ஆயிரம் எக்டேர் நிலங்கள் பயன்பெறும். முதல் கட்டத்தில் 17,500 எக்டேர் பரப்பு நிலங்கள் ரூ.6.47 கோடி செலவில் பயன் பெறத் திட்டமிடப்பட்டுள்ளது.

இரண்டாவது கட்டத்தின் மூலம் தென்காசி, சங்கரன்கோயில், ராதா புரம், நான்குநேரி ஆகிய வட்டங் களிலுள்ள சுமார் 118 கிராமங்கள் பயன்பெறும். முதல் கட்டத்தில் 34 கிராமங்கள் இந்தத் திட்டத்தின் மூலம் பயனடைந்தன; முதல் கட்டப் பணிகள் 31.3.1994-இல் முடி வடையும்.

## நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டம்:

# இடு பொருட்கள் வழங்கும் விழா

**நாக**ப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டத்தின் சார்பில் குறுவை 93 தொடக்க விழா மற்றும் இடு பொருட்கள் வழங்கும் விழா நன்னிலத்தில் நடைபெற்றது.

தமிழ்நாடு மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் திரு கு.ப. கிருஷ்ணன் அவர்கள் கலந்து கொண்டு, விழாப் பேருரை ஆற்றுகையில்:-

''இந்த ஆண்டு மட்டும் இம் மாவட்டத்தில் 660 கி.மீ. நீளத் திற்குப் பாசன வாய்கால்கள் தூர் வாரும் பணிகள் மேற்கொள்ளப் பட்டது.

குறுவையில் சாகுபடி செய்யக் கூடிய ஆடுதுறை-36 விதை நெல் கிலோ 5 ரூபாய் 30 காசுக்கு விற்கப்படுகிறது. ஜே.ஜே.92 நெல் விதை 128 விவசாயிகளுக்கு மாவட் டம் முழுவதும் வழங்கப்பட்டுள்ளது. இந்த நெல் வெளி நாட்டில் கிலோ ரூபாய் 60-க்கு விற்கப்படுகிறது. இந்த நெல் ஒரு ஏக்கர் சாகுபடி செய்தால் 16,000 ரூபாய் வரு மானம் கிடைக்கிறது. இதில் விவசாயிகளுக்குச் செலவு - ஏக்க ருக்கு ரூபாய் 6,000 விவசாயி களுக்கு நிகர லாபம் ரூபாய் 10,000.

கலிங்கா என்ற நெல் ரகம் 70, 75 நாட்களுக்குள் பலன் கொடுக்கக் கூடிய நெல். இந்த நெல் வறட்சி யையும் தாங்கக் கூடிய நெல் ரகம். தாய் நிறுவனம், என்கோபெட் மூலம் குறைந்த விலையில் விவசாயி களுக்கு உரங்கள் வழங்கப்படும். இந்த உரங்களை விவசாயிகள் தங் களுக்கு வழங்கப்பட்டுள்ள அடை யாள அட்டையினைப் பயன்படுத் திப் பெற்றுக் கொள்ளலாம்.

விவசாயத் துறையின் மூலம் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டிருக் கும் அடையாள அட்டையின் மகத் துவம் போகப் போகத்தான் தெரி யும். விவசாயிகளுக்கு வேளாண் மைக்குத் தேவைப்படும் டயர் வண்டி, தார்ப்பாய் போன்ற பொருட்கள் தரமானவைகளாகக் கிடைப்பதற் காகத் தான் 'என்கோபெட்' மூலம் வழங்கப்பட்டு வருகிறது. பவர் டிரில்லர் பெறும் விவசாயிகள் ரூ.10,000 மானிய விலையில் டிரெய்லரும் பெற்றுக் கொள்ளலாம்.

இந்தியத் துணைக் கண்டத்தி லேயே தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம் தான் சிறந்த பல்கலைக் கழகமாக விளங்குகிறது. இப் பல்கலைக் கழகத்தில் பணி ஆற்றும் விஞ்ஞானிகள் நல்ல உயர் விளைச்சல் தரும் நெல் ரகங்களைக் கண்டுபிடித்து வழங்குகிறார்கள். எனவே, இம் மாவட்டத்தில் உள்ள விவசாயப் பெருங்குடி மக்கள் அரசின் மூலம் வழங்கப்படும் சலுகைகளை உரிய முறையில் பயன் படுத்தி உணவு உற்பத்தியைப் பெருக்க உங்களது வீட்டையும், நாட்டையும் உயர்வடையச் செய்ய வேண்டும். அதேபோல் உணவு உற்பத்தியில் தமிழ்நாட்டில் உள்ள மாவட்டங்களிலேயே உங்களது மாவட்டம் முதலிடம் வகிக்க உங் களது உழைப்பைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்'' என்று கூறினார்.

நிகழ்ச்சிக்குத் தலைமை வகித்து மாவட்ட ஆட்சித்தலைவர் திரு கே. ஸ்கந்தன், பேசுகையில் - ''இம் மாவட்டத்தில் காவிரி, வெண் ணாறு, கல்லணைக் கால்வாய் மூலம் 2,73,434 எக்டேர் பாசன வசதி பெறுகிறது. இம் மாவட்டத் தில் 1,77,503 விவசாயிகள் 4,00,856 விவசாயத் தொழி லாளர்கள் உள்ளனர். இம் மாவட்டம் விவசாயத்தை முதன்மை யாகக் கொண்ட மாவட்டம். கடந்த ஆண்டு குறுவை, சம்பாப் பருவத் தில் 8 இலட்சம் மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டு மாவட டம் வரலாறு காணாத சாதனை படைத்துள்ளது'' என்றார்.

இம் மாவட்டத்தில் - தமிழக முதல்வரின் சிறப்புத் தன்னிறைவுத் திட்டத்தின் மூலம் ரூ.57 இலட்சம் செலவில் பாசன வாய்க்கால்கள் தூர்வாரும் பணி மேற்கொள்ளப் பட்டு முடியும் தருவாயில் உள்ளது. அத்துடன் குடி மராமத்துப் பணி களும் சீரிய முறையில் நடைபெறப் பணிகள் முடுக்கி விடப்பட்டுள்ளன.

வேளாண்மைத் துறை இயக்குநர் திரு நை. கோவிந்தன் தனது வர வேற்புரையில் - ''கடந்த ஆண்டு இம் மாவட்டத்தில் எக்டேருக்கு 7 டன் நெல் உற்பத்தி செய்யப்பட்டு உள்ளது. இந்த ஆண்டு எக்டேருக்கு 10 டன் நெல் விளைச்சல் பெறச் சிறப்புத் திட்டம் ஒன்று செயல் படுத்தப்பட உள்ளது'' என்றார்.

விழாவில் தமிழ்நாடு கை வினைப் பொருட்கள் கழகத்தின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் திரு ஓ.எஸ். மணியன், வேளாண் துறைச் செயலாளர் திரு ஜி. ரங்கா ராவ், தமிழ்நாடு வேளாண் பொறி யியல் கழகத்தின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் திரு கு. செல்ல முத்து, சட்டமன்ற உறுப்பினர்கள் டாக்டர் கோபால், திரு எஸ். ஆசை மணி, திரு எம். பூராசாமி, திரு து. மூர்த்தி, திரு கு. சீனிவாசன், திரு ஆர். கோடிமாரி, திரு பழனிச் சாமி, திரு வே. தம்புசாமி ஆகி யோர் பேசினார்கள்.

இவ் விழாவில், ஒருங்கிணைந்த அரிசி உற்பத்தித் திட்டத்தின் கீழ், ரூ.4 இலட்சம் மானியத்தில் விவ சாய இடுபொருட்களை மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் வழங்கினார்.

முன்னதாக, மயிலாடுதுறையில் காவிரி டெல்டா நீர்ப் பாசனக் கருத்தரங்கில் கலந்துகொண்டு மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் பேசியதாவது:

வரும் குறுவைப் பருவத்தில் இம் மாவட்டத்தில் உள்ள விவசாயி களுக்கு 1,152 டன் விதை, 24 ஆயிரம் டன் உரங்கள், 120 டன் சிங்க் சல்பேட், பெஸ்டிசைட், 1.5 டன் நுண்ணுயிர்ப் பொருட்கள், 25 ஆயிரத்து 400 டன் களைக்கொல்லி ஆகியவை தேவை உள்ளது. இந்தத் தேவையினை விவசாயிகளுக்குப் பூர்த்தி செய்ய அரசு தயார் நிலை யில் உள்ளது.

விவசாயப் பெருங்குடி மக்களுக் குச் சாகுபடியை மேற்கொள்ள கூட் டுறவு வங்கிகள் மூலம் 113 கோடி ரூபாய் பயிர்க் கடன் வழங்க ஏற் பாடு செய்யப்பட்டுள்ளது. விவ சாயிகள் கூட்டுறவு வங்கிகளில் வாங்கிய பயிர்க் கடன் திருப்பிச் செலுத்திய 7-வது நாள் கடன் அளிக்க வகை செய்யப்பட்டுள்ளது. மேலும் இம் மாவட்டத்தில் செயல் பட்டு வரும் முன்னோடி வங்கியின் மூலம் 3000 விவசாயிகளைக் கண் டறிந்து அவர்களுக்குப் பயிர்க் கடன் வழங்க மாவட்ட ஆட்சித்தலைவர் தகுந்த நடவடிக்கை எடுப்பார்.

இம் மாவட்டத்தில் உள்ள விவ சாயப் பெருங்குடி மக்கள் சுழற்சி முறை பாசனத்தை ரத்து செய்யக் கருத்துத் தெரிவித்தார்கள். அதை ஏற்று சுழற்சி முறைப் பாசனத்தை ரத்து செய்யப்படும்.

வரும் குறுவைப் பருவத்தில் ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்புத் திட்டத்தைக் கடைப்பிடித்து உற் பத்தியை விவசாயிகள் பெருக்க வேண்டும். எலியை ஒழிப்பதற்கு முழுமையான ஒத்துழைப்பைத் தந் தால்தான் எலியைக் கட்டுப்படுத்த முடியும். விவசாயப் பெருங்குடி மக்களுக்குத் தங்களுடைய விளை பொருட்களுக்கு நல்ல விலை கிடைக்க அரசு நடவடிக்கை எடுக்கும்'' என்று கூறினார்.

இக்கூட்டத்தில் விவசாய அமைப் புக்களின் பிரதிநிதிகள் விவசாயிகள் கலந்து கொண்டு தங்களது கருத்துக் களை எடுத்துக் கூறினார்கள். இறுதி யில், வேளாண்மைத் துறை இணை இயக்குநர் திரு த. பாலசுப்பிரமணி யன் நன்றி கூறினார்.

**எம். பிச்சையா**
**செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்**
**நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டம்**

★ என்றும், நம் இரண்டு பேருக்குத்தான் வாழ வேண்டும் என்று மனமக்கள் நினைக்கக் கூடாது. சோறில்லை, ஒருத்தன் பட்டினி கிடக்கிறான் என்றால், நாம் எவ்வளவு கொஞ்சமாக சாப்பாடு நம்மிடத்திலே இருந்தாலும் அதிலே கொஞ்சம் கொடுக்கிறோமோ, அந்தக்குணம் இந்த உதவி பெறுபவர்களைவிட செய்கிறவர்களுக்கே பெரிய திருப்தி அளிக்கிறது. 4 பேர் உட்காரும் இடத்தில் இன்னொருவர் வந்துவிட்டால் நாம் இடத்தை நெருக்கிக் கொண்டாவது தருகிறோம் என்றால் அதில் ஒன்றும் கஷ்டம் தோன்றுவதில்லை. உதவி அளிக்கும்படியாக வாய்ப்புக் கிடைத்ததே என்ற மகிழ்ச்சியில் நாம் அதைப் பொருட்படுத்துவது கிடையாது. வாழ்க்கையில் அந்த உணர்ச்சியைப் பெற்று வாழ்ந்தால், பொது நலத்திற்கும் நாம் பயன்பட்டவர்களாக இருக்க முடியும்.







திருநெல்வேலி மாவட்டம்

# பால் வளம் பெருக கால்நடைப் பராமரிப்பு

திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டத்தில், ஒரு கால்நடை மருத்துவப் பெருமனை, ஐந்து கால்நடை மருத்துவமனைகள், ஒரு கால்நடை நோய்ப் புலனாய்வுப் பிரிவு, முப்பத்தாறு கால்நடை மருந்தகங்கள், 75 கால்நடைக் கிளை நிலையங்கள் மூலம் இம் மாவட்டத்திலுள்ள கால்நடைகளிலும் நலன் பாதுகாக்க சிகிச்சை, தடுப்பூசி பணி மேற்கொள்ளப்படுகிறது.

திருநெல்வேலி அபிஷேகப்பட்டியில் ஒரு மாவட்டக் கால்நடைப் பண்ணை செயல்பட்டு வருகிறது. அதில் செயற்கைமுறை இனவிருத்திக்கு வேண்டிய உறைவிந்துக் குச்சிகள் மற்றும் திரவ நைட்ரஜன் உற்பத்தி செய்யப்படுகிறது. இங்கு உற்பத்தி செய்யப்படும் உறைவிந்துக் குச்சிகள் மூலம், இம் மாவட்டம் தவிர இதர மாவட்டங்களின் பால் உற்பத்தியை மேம்படுத்த உயர் இனக் காளைகளிலிருந்து சேகரிக்கப்படும் விந்து மூலம் செயற்கைமுறைக் கருவூட்டல் பணி மேற்கொள்ளப்படுகிறது.

மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், திருநெல்வேலி மாவட்டக் கால்நடைப் பண்ணையில் செயற்கை முறை இனவிருத்தியாக, 1992-93 நிதியாண்டில் ரூ.10 இலட்சம் பெறுமான உயர் இன முர்ரா காளைகள் வெளி மாநிலத்திலிருந்து வாங்கப்பட்டன.

இம் மாவட்டத்தில் 1992-93 சிறப்பு மத்திய உதவித் திட்டத்தின் கீழ், 'தாட்கோ' மானியத்துடன் இந்து ஆதி திராவிட மக்களுக்கு 100 ஆடு அலகுகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில் 100 இந்து ஆதிதிராவிடர்கள் பயன் பெற்றுள்ளனர். இவர்களுக்காக ரூ.4,05,000 மானியம் வழங்கப்பட்டுள்ளது.

இம் மாவட்டத்தில் உலக வங்கித் திட்டத்தின் கீழ் கால்நடைத் தீவன வளர்ச்சித் திட்டம் தொடங்கிக் கால்நடை வளர்ப்பு மற்றும் தீவன வளர்ச்சித் துணை இயக்குநரால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. விவசாயிகளுக்கு எல்லா விதப் புல் விதை கன்று இலவசமாக வழங்கப்படுகிறது.

பால் வளத்தை மேலும் அதிகரிக்க கால்நடை நிலையங்களில் செய்யப்பட்டு வரும் கருவூட்டல் மூலம் பிறக்கும் கன்றுகளை நல்ல முறையில் வளர்க்கக் கால்நடை வளர்ப்போருக்கு தக்க அறிவுரை வழங்கி, அக் கன்றுகளின் உடல் நலம் பேணும் பொறுப்பைக் கால்நடைப் பராமரிப்புத்துறை ஏற்று, இம் மாவட்டத்தில் சுமார் 5000 கன்றுகள் இத் திட்டத்தில் சேர்க்கப்பட்டுப் பராமரிக்கப்படுகிறது.

இறைச்சி உற்பத்தியை அதிகரிக்க, இம் மாவட்டத்திலுள்ள செம்மறி ஆடுகளுக்கு 3 மாதத்திற்கு ஒருமுறை குடற்புழு நீக்கம் செய்யும் பணி, கால்நடை நிலையங்கள் மூலம் செய்யப்பட்டு வருகிறது.

### முதல்வரின் நலத்திட்ட உதவிகள்

மாண்புமிகு முதல்வர் அவர்களின் நலத் திட்டத்தின் கீழ் நெல்லை மாவட்டத்தில் மார்ச் 1993 முடிய மொத்தம் 10,007 நபர்களுக்கு 1112.30 இலட்ச மதிப்பீட்டில் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளன. மொத்தப் பயனாளிகளில் 3,540 பேர் பெண்கள். மொத்த உதவித் தொகையில் அரசு மானியம் ரூ.436.88 இலட்சம் ஆகும்.

### திரையரங்குகள்

திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டத்தில் மொத்தம் 117 திரையரங்குகள் உள்ளன. இவற்றில் 55 நிரந்தரத் திரையரங்குகளும், 51 நடமாடும் திரையரங்குகள் (Touring Talkies) அடங்கும்.

தருமபுரி மாவட்டம்:

# தோட்டக்கலை வளர்ச்சி



தருமபுரி மாவட்டம் தோட்டக்கலை மேம்பாட்டிற்கு அதிகமான வளத்தைத் தன்னகத்தே கொண்டு திகழ்கிறது. இம்மாவட்டத்தில் நிலவும் தட்பவெப்ப நிலை பலவகையான தோட்டக்கலைப் பயிர்களைப் பயிரிட உகந்ததாக உள்ளது. தருமபுரி மாவட்டத்தில் உள்ள மொத்தப் பயிரிடும் பரப்பில், சுமார் 80 சதவிகிதம் மானாவாரி நிலமாகும்.

இம்மாவட்டத்தில் ஆண்டுச் சராசரி மழையளவு 850 மி.மீ. இது தமிழகத்தின் சராசரி மழையளவைவிட 10 சதவிகிதம் குறைவானதாகும். தருமபுரி மாவட்டத் தில் பல பகுதிகள் பருவமழை தவறுவதன் காரணமாக அடிக்கடி வறட்சிக்கு இலக்கா கின்றன. இதனால் மானாவாரிப் பகுதியில் தொன்றுதொட்டுப் பயிரிடப்படும் சிறு தானியம், பயறு வகைகள் மிகவும் பாதிக் கப்படுவதுடன் மிகக் குறைந்த வருவாயையே அளிக்கிறது. இந்நிலைமை யைக் கருதியும், தோட்டக்கலைப் பயிர்கள் பயிரிடுவதன் முக்கியத்துவத்தைக் உணர்ந் தும் இம்மாவட்ட விவசாயிகள் தங்கள் நிலங்களில் சிறு தானியங்கள் பயறு வகைகள் பயிரிடுவதைத் தவிர்த்துப் பல ஆண்டுகளாகத் தோட்டக்கலைப் பயிர் களான மா, புளி, சீதா, போன்றவை களையே பெரிதும் பயிரிட ஆரம்பித்து உள்ளனர்.

அத்துடன், நீர்ப்பாசனம் உள்ள பகுதிகளில் கொய்யா, சப்போட்டா, மாதுளை போன்றவைகளையும் பயிரிடு கின்றனர்.

இம்மாவட்டத்தில் மொத்தம் சாகுபடி பரப்பில் 8 சதவிகித பரப்பு பழங்கள் மற்றும் காய்கறிகளின் கீழ் உள்ளது. இதுவே தமிழகத்தில் 4.80 சதவிகிதமாக உள்ளது. பழப்பயிர்களில் மா மட்டும் இம்மாவட்டத்தில் 18,759 எக்டேரில் சாகுபடி செய்யப்படுகிறது. இப்பரப்பு, தமிழகத்தில் மா பரப்பில் 35 சதவிகித மாகும். மாநில அளவில் திராட்சை மற்றும் கொய்யா சாகுபடி பரப்பில் முறையே 18 சதவிகிதம் மற்றும் 11 சதவிகிதத்தைத் தருமபுரி மாவட்டம் கொண்டுள்ளது.

தமிழகத்திலேயே தருமபுரி மாவட்டம் பழப்பயிர்கள் பரப்பில் 15 சதவிகிதத் தைத் தன்னகத்தே கொண்டு முதலிடத்தை வகிக்கிறது.

இம்மாவட்டத்தில் தக்காளி, முட்டைக் கோஸ், மரவள்ளி அதிகளவில் பயிரிடப் பட்டு காய்கறி பயிரிடுதலில் தமிழகப் பரப்பில் 9 சதவிகிதம் சாகுபடி செய்யப் படுகிறது.

வாசனை மற்றும் தாளிதப் பொருளாக உபயோகப்படுத்தப்படும் புளி தமிழகத் தில் 12 சதவிகிதப் பரப்பில், அதாவது 1,659 எக்டேரில் தருமபுரியில் மட்டுமே பயிரிடப்படுகிறது.

இம்மாவட்டம் மா வளர்ப்பு மற்றும் உற்பத்தியில் முதலிடம் வகிப்பதால், இப்பழப்பயிரின் வளர்ச்சியைக் கருத்திற் கொண்டு அகில இந்திய மாங்கனி விழா ஒன்று கடந்த ஆண்டு ஜூன் 5 முதல் 9 வரை கிருஷ்ணகிரியில் நடத்தப்பட்டது. இக்கண்காட்சியில் கர்நாடகம், மகாராட்டிரம், மத்தியப்பிரதேசம், ஆந்திரா, பாண்டிச்சேரி உட்பட பல மாநிலங் களிலிருந்தும் 500-க்கும் மேற்பட்ட காட்சிப் பொருட்கள் இடம் பெற்றிருந் தன. சிறந்த காட்சிப் பொருட்களுக்கு ரூபாய் ஒரு இலட்சம் மதிப்புள்ள பரிசுக் கோப்பைகள் வழங்கப்பட்டன.

**1992-93-ஆம் ஆண்டில்...**

தருமபுரி மாவட்டத்தில் தோட்டக் கலை வளர்ச்சிக்குக் கீழ்க்கண்ட திட்டங்கள் நடப்பு ஆண்டில் (1992-93) செயலாக் கப்படுகின்றன.

1. ஒருங்கிணைந்த தோட்டக்கலை வளர்ச்சித் திட்டம்.
2. ஒருங்கிணைந்த ஆதிவாசிகள் மேம்பாட்டுத் திட்டம்.
3. வறட்சிக்கு இலக்காகும் பகுதித் திட்டம்.
4. அரசு தோட்டக்கலைப் பண்ணைகள்.
5. அகில உலகத் தொழிலாளர் ஒருங் கிணைப்புத் திட்டம்.

**ஒருங்கிணைந்த தோட்டக்கலை வளர்ச்சித் திட்டம்**

தருமபுரி மாவட்டத்தில் தோட்டக் கலைச் சாகுபடிக்கு நிலவும் சாதகமான சூழ்நிலையை நன்கு பயன்படுத்துமுகமாக நிரந்தரத் தோட்டக்கலைப் பயிர்கள் விவசாயிகளிடையே 50 சதவிகித மானிய விலையில் வழங்கப்பட்டு, புதிய தோட் டங்கள் அமைக்க உதவி செய்யப்படு கிறது. அதிக விளைச்சல் தரும் காய்கறி விதைகள் முழு விலையில் விவசாயி களுக்கு விநியோகம் செய்யப்படுகிறது. நடப்பு ஆண்டில் 875 எக்டேர் பரப்பில் பழப்பயிர்களும், 875 எக்டேர் பரப்பில் காய்கறிகளும் சாகுபடி செய்யத் திட்ட மிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் நிதி ஒதுக்கீடு ரூ.10.500 இலட்சமாகும்.

**வறட்சிக்கு இலக்காகும் பகுதித் திட்டம்**

இத்திட்டம் இம்மாவட்டத்தில் தேர்வு செய்யப்பட்டுள்ள நீர்ப் பிடிப்புப் பகுதிகளில் நடைமுறைப்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் பழச்செடிகள் விவசாயிகளுக்கு 50 சதவிகித மானிய விலையில் வழங்கப்படுகிறது. மேலும், கிடைக்கும் நீரினைச் சிக்கனமாகப் பயன்படுத்தக் கசிவு நீர்ப் பானைகளும், கற்றாழை வேலி அமைக்க முழு மானியமும் சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறது. நடப்பு ஆண்டில் 400 எக்டேர் பரப்பு மா சாகுபடிக்குக் கொண்டுவரப் படவுள்ளது. இத்திட்டத்தின் நிதி ஒதுக்கீடு ரூ.6 இலட்சமாகும்.

**ஒருங்கிணைந்த ஆதிவாசிகள் மேம்பாட்டுத் திட்டம்**

தமிழ்நாட்டில் பழங்குடியினர் நலம் கருதியும் அவர்களின் சமூக பொருளாதார தரத்தை மேம்படுத்தவும், மலைப் பகுதிகளில் தோட்டக்கலைப் பயிர்ப் பரப்பினை அதிகரிக்கவும் ஒருங்கிணைந்த ஆதிவாசிகள் மேம்பாட்டுத் திட்டம் செயல்படுகிறது. தருமபுரி மாவட்டத்தில் இத்திட்டம் சித்தேரி மலைப்பகுதிகளில் செயல்படுத்தப்படுகிறது.

பழங்குடியினருக்குப் பழத் தோட்டங்கள் அமைக்கப் பழச்செடிகள், பயிர்ப் பாதுகாப்பு மருந்துகள், வேளாண் கருவிகள் ஆகியவை 100 சதவிகித மானிய விலையில் வழங்கப்படுகின்றன. நடப்பு ஆண்டில், 80 எக்டேர் பரப்பு, பழப்பயிர்கள் சாகுபடிக்குக் கொண்டு வரப்படவுள்ளது. இத்திட்டத்தின் நிதி ஒதுக்கீடு ரூ.2.540 இலட்சமாகும்.



**அரசு தோட்டக்கலைப் பண்ணைகள்**

இம்மாவட்டத்தில், திம்மாபுரத்தில் ஓர் அரசு பழப்பண்ணையும், ஜீனூரில் ஓர் பெரிய அளவு பழப்பண்ணையும் செயல்படுகின்றன. தரமான பழச் செடிகளை விவசாயிகளுக்கு உற்பத்தி செய்து விநியோகம் செய்வதும், விவசாயிகளிடையே இப்பண்ணைகளை ஓர் மாதிரி தோட்டக்கலைப் பண்ணைகளாக மாற்றுவதும் குறிப்பிடத்தக்கது.

தவிரவும், வறட்சிக்கு இலக்காகும் பகுதித் திட்டத்தின் கீழ் போளையம் பள்ளியிலுள்ள தருமபுரி மாவட்ட வளர்ச்சிக் கழகத்தின் கட்டுப்பாட்டில் நாகமங்கலத்திலும், தோட்டக்கலைப் பண்ணைகள் உள்ளன. அரசு தோட்டக் கலைப் பண்ணைகளில் நடப்பு ஆண்டு 3.90 இலட்சம் செடிகள் உற்பத்தி செய்யப்பட்டு விநியோகம் செய்யப்பட உள்ளன. இதற்கென ரூ.7.62 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**அகில உலகத் தொழிலாளர் ஒருங்கிணைப்புத் திட்டம்**

இத்திட்டம் தளி வட்டாரத்தில் செயல்படுத்தப்படுகிறது. இந்தப் பகுதி மிகவும் பின்தங்கிய பகுதியாக இருப்பதால், இப்பகுதியில் உள்ள சிறு விவசாயிகளுக்கு ஒரு விவசாயிக்கு ஒரு ஏக்கர் என்ற அளவில் அரசு செலவில் குழி எடுத்து மா ஒட்டுச் செடிகள் 100 சத மானிய விலையில் தட்டுத் தரப்படுகிறது.

உரிய தொழில் நுட்ப ஆலோசனைகளும் வழங்கப்படுகின்றன. நடப்பு ஆண்டு 22 எக்டேர் பரப்பு 'மா' சாகுபடிக்குக் கொண்டுவரப்படுகிறது. இத்திட்டத்திற்கென ரூ.4.40 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது. ●


தமிழரசு

**புதிய சந்தா விவரம்**

**'தமிழரசு' தமிழ் (மாதம் இருமுறை)**
ஆண்டுச் சந்தா ... ரூ.72
அரையாண்டுச் சந்தா ... ரூ.36

**'தமிழரசு' ஆங்கிலம் (மாதம் ஒருமுறை)**
ஆண்டுச் சந்தா ... ரூ.36

சந்தாத் தொகையை - மணியார்டர் அல்லது பாங்க் டிராப்ட் மூலம் அனுப்ப வேண்டிய முகவரி:

உதவி இயக்குநர்
'தமிழரசு'
அரசினர் தோட்டம்
சென்னை-600 002.

தமிழரசு

படிக்க — பயன்பெற — பாதுகாக்க




'நூல்நயம்' பகுதிக்கு இரண்டு பிரதிகள் அனுப்ப வேண்டும்.

— ஆசிரியர்

### பட்டத்து யானை

ஆசிரியர்: கவியரசு நா. காமராசன்
வெளியீடு:

மகாகவி பதிப்பகம்
2, ஜயசங்கர் தெரு
சென்னை-33

பக்கம்:100 விலை:ரூ.16/-

முதல் கவிதையே நம் இதயத்தில் இடம் பிடித்துவிடுகின்றது. அது:

''நான் வாழும் வரை
என் கவிதைகள்
உங்கள் உதடுகளில் மலரும்
எனது மரணத்திற்குப் பிறகு
அவை உங்கள்
இதயங்களில் விதைக்கப்படும்''

கவிஞன் என்பவன் யார்? இந்த வினாவிற்குப் பதிலாக வருவதுதான்,

''கவிஞன் ஒளியின் நிழலல்ல;
அவன் இரவின் ஒளி''

என்கிற வைர வரிகள்.

இப்படி தேன்சொட்டும் கவிதை வரிகளைச் சொல்லிக் கொண்டே போகலாம்.

'கல்யாண மண்டபம்' எனும் கவிதை காலத்தின் கண்ணாடியாய்த் திகழும் அற்புதக் கவிதை. இதேபோல, பொய் மான்கள், சாம்பல் நெருப்பு, மனிதனும் மரணமும், கல் இப்படி ஏராளமான கவிதைகள் இதிலே உண்டு. மெச்சத் தகுந்த அழகிய அச்சமைப்பு.

— பி.வி.கிரி.

### பேரருள் வழங்கும் சீரடி சாயிபாபா

ஆசிரியர்: ஸ்வாமி முருகானந்தா
வெளியீடு:

கார்த்திகா பப்ளிகேஷன்ஸ்
92 கங்கையம்மன் கோயில் தெரு,
சென்னை-26.

பக்கம்:112 விலை:ரூ.16/-

சீரடி சாயிபாபா சிறப்பும் செயலும் அழகுறத் தொகுக்கப்பட்டுள்ளன. வாழ்க்கை வரலாற்றுடன், அவரது மகிமை குறித்தும் பல நிகழ்வுகளை இழைய விட்டிருப்பது நூலின் சிறப் பாகும்.

### 'உந்தன் மனம் நந்தவனம்'

ஆசிரியர்: தேவிபாலா
வெளியீடு:

மயிலவன் பதிப்பகம்
92, கங்கையம்மன் கோவில் தெரு
வடபழனி, சென்னை-26.

பக்கம்:320 விலை:ரூ.40/-

கிருஷ்ணாவை அவன் கல்லூரியில் பயிலும் கோகுல் வேண்டி, விரும்பி நட்புக் கொள்கிறான். கோகுலின் ஊமைத் தங்கை சுமா கிருஷ்ணாவின் இதயத்தில் இடம் பிடிக்கிறாள். இரண்டு நடுத்தரக் குடும்பங்களிலும் நடைபெறும் அடுக்கடுக்கான சம்பவங்கள் அழகாக விவரிக்கப்படுகின்றன.



கதையை சிறிதும் அலுப்புத்தட்டாமல் விறுவிறுப்பாகக் கொண்டு சென்றாலும், கிருஷ்ணா பாத்திரம் மட்டும் நெருடலை ஏற்படுத்துகிறது.

என். குமாரசாமி

### திருக்குறள் ஆய்வுச் சிந்தனைகள்

ஆசிரியர்: புலவர் குமரன்
வெளியீடு:

கவிச்சிங்கம் பதிப்பகம்
உத்தமபாளையம்
மதுரை-625 533

பக்கம்:83 விலை:ரூ.15/-

திருக்குறள் கடல் போன்றது. அதில் ஆழ்ந்து முத்தெடுப்போர் பலர். அந்த வகையில் பல அழகிய அரிய முத்துக் களைத் தந்துள்ளார் இந்நூலாசிரியர்.

முற்றிலும் புதிய கோணத்தில் புதிய கண்ணோட்டத்தில் எழுதப்பட்ட ஆய்வுக் கட்டுரைகள்.

பி.வி.ஜி.

### தனித் தமிழியக்கம்

ஆசிரியர்: முனைவர் கு. திருமாறன்
வெளியீடு:

மருதம்
672, பெரியார் சாலை,
கருணாநிதிநகர், திருச்சி-620 021.

பக்கம்:344 விலை:ரூ.60/-

தனித் தமிழியக்கம் என்கிறபோது, தனித் தமிழ்த் தந்தை மறைமலையடி களார், மொழிஞாயிறு தேவநேயப்பாவா ணர் ஆகியோர் முக்கிய இடம் பெறு கின்றனர். தனித் தமிழியக்க மலர்ச்சிக்கு அவர்கள் ஆற்றிய தொண்டு அளப் பரியது.

இந்நூலில், தனித் தமிழியக்கத்தின் தோற்றம் வளர்ச்சி நன்கு ஆராயப் பட்டுள்ளது. தாளிகைகளில் எப்படி யெல்லாம் தமிழ்ச் சொற்கள் கையாளப் பெற்றுள்ளன என்பதை, தக்க ஆதாரங் களுடன் நிரூபிக்கிறது இந்நூல். அதே போல, ஆட்சி மொழிச் சொற்களும் வளர்ந்துள்ள நிலைமைகளை நூல் நன்கு விளக்கி, தனித் தமிழியக்கம் மக்கள் இயக்கம் என்பதை நிலைநாட்டுகிறது. தமிழ் ஆர்வலர் மற்றும் ஆய்வு மாணவர்க்கு இந்நூல் மிகச் சிறந்த கையேடாக - வழிகாட்டியாக அமையும் என்றால் அது மிகையல்ல.

மறைமலை

தமிழ் வளர்த்த பெரியார்:

# டாக்டர் மு. வரதராசனார்

மு.வ. என்னும் இரண்டு எழுத்தைத் தமிழுலகம் நன்கறியும். இந்த இரண்டு எழுத்துக்களுக்குள் ஒளி(ர்)ந்து கொண்டிருக்கும் டாக்டர் மு. வரதராசனார் எனும் திருப்பெயர், திருவள்ளுவன் புகழ் போல காலமெல்லாம் வாழ்ந்து கொண்டிருக்கும் என்றால் அது மிகையல்ல.

எளிமை, இனிமை, சீர்மை இவற்றின் மொத்த உருவாக மு.வ. விளங்கினார். அவரது படைப்புகளும் அவரைப் போலவே விளங்கின.

அவருடைய வாழ்க்கை, தமிழ்த் தொண்டு, எல்லாமே மற்றவர்களுக்கு ஒரு முன்மாதிரியாக இருந்தன. அவர் சொல்லும் செயலும், நிஜமும் நிழலுமாக இணைந்தே இருந்தன.

அவர் எதை எழுதினாலும் அதில் ஒரு செய்தி (Message) நிச்சயம் இருக்கும். எந்தப் பொருளையும் எளிமையாக எழுதுவது அவரது இயல்பு.

ஒரு சமயம் அவரைப் பேட்டி காணும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. நேரம் போவதே தெரியவில்லை.

அலை அலையாய் எண்ணங்கள் வந்து மோத, மலைமலையாய்க் கருத்துக்கள் வந்து குவிந்தன. சிந்தனைச் சிதறல்கள் வைரக் கற்களாய் பின்னின. சிறந்த ஒரு தமிழறிஞரைச் சந்தித்து அளவளாவியது கருதி மகிழ்ந்தேன். இதேபோல பலருக்கும் இத்தகைய நல்வாய்ப்பு ஏற்பட்டிருக்கக் கூடும்.

டாக்டர் மு.வ.வின் பெரு வாழ்வு, தமிழுக்குக் கிடைத்த தவப்பயன் என்றே நாம் குறிப்பிட வேண்டும்.

அந்த வாழ்வின் வடிவங்களைப் பார்ப்போமா?

மு.வ., வட ஆர்க்காடு மாவட்டம் வேலம் என்னும் குக்கிராமத்தில், 25.4.1912-இல் பிறந்தார். பெற்றோர் முனுசாமி, அம்மாக்கண்ணு அம்மையார். மு.வ.-வுக்கு முதலில் இட்ட பெயர் 'திருவேங்கடம்' என்பதே. வரதராசன் என்பது பாட்டனாரின் பெயராகும். குடும்ப மரபுப்படி இந்தப் பெயர் இடப்பட்டது.

மு.வ. தன் பாட்டி நரசம்மாவிடம் வளர்ந்தார். பாட்டியின் அன்பு மழையில் நனைந்தார். பிற்காலத்தில் தாம் எழுதிய நெடுங்கதை ஒன்றில் ('விடுதலையா?') தம் பாட்டியை நினைவு கூர்ந்திருக்கிறார் என்றால், அவர் பாட்டியின் மீது வைத்திருந்த அளவில்லாத அன்பை நாம் தெரிந்து கொள்ளலாம்.

இயற்கையின் எழிலில் யார்தான் இதயத்தைப் பறிகொடுக்கமாட்டார்கள்! மு.வ., அன்னைப் பூமியிலே அழகுற வீற்றிருக்கும் மாஞ்செடி கொடிகள், அருவி, ஆறு, மலர்கள் என்னும் இயற்கைக் காட்சிகளில் மனத்தைப் பறிகொடுத்தார். பொழுது போவதே தெரியாமல், பொன்மாலைப் பொழுதுகளைக் கழித்தார்.

மு.வ., வேலம் மற்றும் வாலாசாவில் தொடக்கக் கல்வி பயின்றார். பள்ளியில் சிறந்த மாணவனாக விளங்கி பள்ளி இறுதி வகுப்பில் தேர்ச்சி பெற்றார். அப்போது அவருக்கு வயது பதினாறு. 1928-இல், திருப்பத்தூர் தாலுக்கா அலுவலகத்தில் எழுத்தராகப் பணியாற்றினார். அப்போது உடல் நலம் குன்றிய நிலையில், வேலையை விட்டு விலகினார். வீட்டிலேயே ஓய்வு பெற்று வந்தார். அந்த நிலையில் அவர், திருப்பத்தூர் முருகைய முதலியாரிடம் தமிழ் பயிலத் தொடங்கினார். 1931-இல், மு.வ., வித்துவான் முதனிலைத் தேர்வில் தேர்ச்சி பெற்று, தொடர்ந்து படித்து, 1935-இல் வித்துவான் பட்டம் பெற்றார்.

வித்துவான் தேர்வில், மாநிலத்திலேயே முதல்வராகத் தேர்ந்தெடுக்கப் பட்டு திருப்பனந்தாள் பரிசாக ரூ.1000 பெற்றார்.

1939-இல் பி.ஓ.எல். பட்டமும், 1944-இல் எம்.ஓ.எல் பட்டமும் பெற்றார். 1948-இல், சென்னைப் பல்கலைக் கழகத்திலேயே, முதன்முதலில் தமிழில் டாக்டர் பட்டம் பெற்றவர் மு.வ., ஒருவரே. 1972-இல், அமெரிக்காவிலுள்ள ஊஸ்டர் கல்லூரி, அவருக்கு இலக்கியப் பேரறிஞர் (டி.லிட்.,) என்னும் சிறப்புப் பட்டத்தை வழங்கியது. இதிலும் மு.வ.வுக்கு ஒரு பெருமை உண்டு. அமெரிக்கப் பல்கலைக் கழகம் ஒன்றில் டி.லிட்., சிறப்புப் பட்டம் பெற்ற முதல் தமிழறிஞர் இவரே ஆவார்.



பிறகு மு.வ., நகராண்மைக் கழக உயர்நிலைப் பள்ளியில் ஆசிரியராகப் பணியாற்றினார். அப்போது பல இதழ்களில் கட்டுரைகள் எழுதத் தொடங்கினார்.

1935-இல் இவருக்குத் திருமணம் நடந்தது. மாமன் மகள் ராதாவை மணந்தார்.

டாக்டர் அ. லட்சுமணசாமி முதலியார் உதவியால், சென்னை பச்சையப்பன் கல்லூரியில், விரிவுரையாளரானார் (1939-1944). அப்போது அங்குத் தமிழ்த்துறைத் தலைவராக இருந்தவர் மோ. கந்தசாமி முதலியார் (1889-

1945). இவர் பேரறிஞர் அண்ணா அவர்களின் ஆசிரியராவார்.

இந்தக் காலகட்டத்தில்தான் மு.வ., நூல் எழுதுவதில் முதன்முதலாக ஈடு பட்டார். பொதுவாகப் பார்க்கும்போது, இன்று பிரபல எழுத்தாளர்களாக விளங்கிக் கொண்டிருக்கும் எழுத்தாளர் களெல்லாம், தொடக்கத்தில் குழந்தை களுக்காகவே எழுதினார்கள். நாளைய தலைமுறைகளான இன்றைய குழந்தை களுக்கு எழுதுவதையே அவர்கள் பெரி தும் விரும்பினார்கள். ஒரு கருத்தை முதலில் யார் மூலம் சொன்னால் அது நாளைய சமுதாயத்துக்குப் பலன் கொடுக் கும் என்பதை உணர்ந்தே அவர்கள் குழந்தைகளுக்காக எழுதினார்கள் போலும்!

அந்த வகையில், மு.வ. அவர்களும் குழந்தைகளுக்காக ஒரு நூலை எழுதி னார். 'குழந்தைப் பாட்டுக்கள்' என்னும் அதுவே அவரது முதல் நூலாகும் (1939). அந்தத் தொகுப்பில் உள்ள ஒரு பாடலைப் பார்ப்போமா?

ரோஜாப் பூவாடிவிடும்
சண்பகப் பூவாடிவிடும்
மல்லிகைப் பூவாடிவிடும்
முல்லைப் பூவாடிவிடும்
வாடாத பூ எதுவோ
வளருகின்ற பூஎதுவோ
வாடாத பூஅறிந்தேன்
வளருகின்ற இடம்அறிந்தேன்
வாடாதபூ படிப்பூ
வளரும் இடம்பள்ளிக்கூடம்!

பிறகு இளைஞர்களுக்கேற்ற இனிய கதைகள், படியாதவர் படும்பாடு, கண்ணுடைய வாழ்வு ஆகிய சிறுவர் நூல்களை எழுதினார். 'சிறுவர் இலக் கணம்' எனும் தலைப்பில் மூன்று தொகுதிகளை வெளியிட்டார்.

மு.வ.வின் முதல் நாவல் 'செந் தாமரை' (1944). இது, மு.வ.வுக்குப் பெரும் புகழை ஈட்டித் தந்தது.

பச்சையப்பன் கல்லூரியில் விரிவுரை யாளராக இருந்த மு.வ., அவர்கள், 1945-இல், அக்கல்லூரியிலேயே தமிழ்த் துறைத் தலைவராகப் பொறுப்பேற்றார்.

சொல்லின் செல்வர் டாக்டர் ரா.பி. சேதுப்பிள்ளை அவர்களின் மறைவிற்குப் பிறகு, டாக்டர் மு.வ., அவர்கள், சென்னைப் பல்கலைக் கழகத்தின் தமிழ்த்துறைத் தலைவராகப் பணியாற்றி னார் (1961-1971). பிறகு மதுரை காமராசர் பல்கலைக் கழகத்தின் துணை வேந்தராகப் பணியாற்றினார் (1971-1974).

## அண்ணா போற்றிய பெருமக்கள்



### மறைமலையடிகள்

**தமிழர்களுக்கு, அவர்களது தனி நாகரிகம் எது? அவர்கள் வணங்கத் தக்கன என்ன? அவர்கள் மொழியின் மாண்புகள் என்னென்ன? - என்பனவற்றையெல்லாம் ஆராய்ந்து, மக்கள் மன்றத்திற்கு எடுத்துச் சொன்னார்கள். அவர்தம் கருத்துக்களை அறிகிறவர்கள், படிக்கத் தக்க நூல்கள் எவை என்பனவற்றை அறிந்து கொள்ள முடியும்; சிந்திக்கத் தூண்டும் நூல்கள் எவை என்பதைப் புரிந்து கொள்ள முடியும்.**

டாக்டர் மு.வ. அவர்கள் பன் மொழிப் புலவராகத் திகழ்ந்தார். தமிழ், ஆங்கிலம், தெலுங்கு, மலையாளம், கன்னடம், இந்தி ஆகிய மொழிகளில் புலமை பெற்றிருந்தார். பல மேலை நாடுகளுக்குச் சென்று தமிழின் பெருமை யைப் பறைசாற்றினார்.

மு.வ., பல துறைகள் குறித்த நூல் களைத் தமிழன்னைக்குப் படைத்திருக் கிறார். நாவல்-13, சிறுகதை-2, சிந்தனைக் கதை-2, நாடகம்-6, கட்டுரை நூல்-11, இலக்கியம்-24, சிறுவர் இலக் கியம்-4, கடித இலக்கியம்-4, பயண இலக்கியம்-1, இலக்கிய வரலாறு-1, மொழி இயல்-6, வாழ்க்கை வரலாறு-4, ஆங்கில நூல்-2, சிறுவர் இலக்கணம்-3, மொழிபெயர்ப்பு நூல்-2.

இவருடைய நூல்கள் தெலுங்கு, மலையாளம், கன்னடம், இந்தி, சிங்களம், ஆங்கிலம் முதலிய மொழி களில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன.

டாக்டர் மு.வ. அவர்களின் பல நூல்கள் பரிசும் பாராட்டும் பெற் றுள்ளன. இவர் எழுதிய 'அகல்விளக்கு', குடியரசுத் தலைவரின் சாகித்திய அகா டெமியின் பரிசினையும் பெற்றுள்ளது. 'கள்ளோ? காவியமோ?', 'அரசியல் அலைகள்', 'மொழியியற் கட்டுரைகள்' ஆகிய மூன்று நூல்களும் தமிழக அரசின் பரிசினைப் பெற்றவை.

திருவள்ளுவர் அல்லது வாழ்க்கை விளக்கம், மொழி நூல், கள்ளோ? காவியமோ?, விடுதலையா?, அரசியல் அலைகள், ஓவச் செய்தி ஆகிய ஆறு நூல்களும் தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் பாராட்டிதழ்களைப் பெற்றவை.

இறுதி மூச்சு வரை டாக்டர் மு.வ. அவர்கள், தமிழ்த் தொண்டிலேயே தன்னை அர்ப்பணித்துக் கொண்டார். நாடு, மொழி, அவரது இரு கண்களாக இருந்தன. உடல் நலத்தைக் கூட கவனிக்காமல் உயர் தமிழ்ச் செம்மொழி குறித்தே சிந்தித்தார்; செயல் பட்டார்.

1974-ஆம் ஆண்டு அக்டோபர்த் திங்களில் பட்டமளிப்பு விழா ஒன்றில் கலந்து கொண்டபோது, இதயநோய் அவரைத் தூக்கியது - அதன் விளைவால், அவர் படுக்கையில் கிடக்க நேர்ந்தது. உடல் தளர்ந்தாலும் உள்ளம் தளராமல் உறுதியோடு தமிழ்த் தொண்டாற்றினார். ஆனால், இயற்கையழகிலேயே இதயத் தைப் பறிகொடுத்த மு.வ., அவர்களை இயற்கையன்னை அவரை அழைத்துக் கொண்டார். ஆம், 10.10.1974 அன்று டாக்டர் மு.வ. அவர்கள் நம்மையெல் லாம் விட்டுப் பிரிந்தார். அவரது மறைவு தமிழுலகிற்குப் பேரிடியாக மட்டுமல்லா மல் பேரிழப்பாகவும் இருந்தது.

அவர் மறைந்தாலும், அவர் விட்டுச் சென்ற தரமான இலக்கிய படைப்புகள் இந்தத் தரணி உள்ளவரை அவர் பெய ரைச் சொல்லிக் கொண்டே இருக்கும்.

அவரது பெருவாழ்வு, முன்னேறத் துடிக்கும் இளைஞர்க்கு மட்டுமல்ல, படிப்படியாய் முன்னேறிக் கொண்டிருப் போர்க்கும் வழிகாட்டியாக அமையும் என்றால் அது உண்மை, வெறும் புகழ்ச்சியில்லை.

— பி.வி. கிரி.

மாணவர் பக்கம்:

# தெரிந்து கொள்ளுங்கள்

◦ சம்பளத்துக்கு ஆங்கிலத்தில் Salary என்று பெயர். Salarium என்னும் இலத்தீன் சொல்லிலிருந்து Salary பிறந்தது. இலத்தீனில் சால் (Sal) உப்பைக் குறிக்கும். முற்காலத்தில் ரோமப் பேரரசின் படை வீரர்கள் தங்களுடைய சம்பளமாக உப்பைத் தான் பெற்றார்கள். உப்பு அப்போது மிக அரிதான பொருளாக இருந்தது. 'உப்புப் பணம்' என்ற பொருளில் சாலரி (Salary) என்ற சொல் பயன்படுத்தப் பட்டது.

◦ தானத்தில் சிறந்தது கண்தானம். கண்தானம் செய்தவர்கள் இறந்து விட்டால் அவர்களின் கண்கள் ஆறு மணி நேரத்திற்குள் உடலில் இருந்து அகற்றப்பட வேண்டும். மருத்துவர்கள் அதிக நுட்பத்திறனுடன் இந்த ஆபரேஷனைச் செய்வதால் முகத்தில் எந்தவித விகாரமும் ஏற்படாது.

கண்களில் காட்ராக்ட் ஆபரேஷன் செய்தவர்கள்கூட தங்களது கண்களைத் தானம் செய்யலாம்.

நாம் இறந்த பின்பும் நம் கண்கள் இந்த உலகத்தைப் பார்த்துக் கொண்டிருக்கிறது என்று நினைப்போமானால் நாட்டில் கண் தெரியாதவர்களின் எண்ணிக்கை குறையுமல்லவா!

◦ கேப்டன் குக் முதல் முறையாக ஆஸ்திரேலியா வந்தபோது தன் பின்னங்கால்களால் தாவித்திரியும் ஒரு விலங்கைக் கண்டார். அங்கிருந்த பழங்குடி மக்களிடம் அதன் பெயரைக் கேட்க 'கங்காரு' என்றார்கள். அந்த மக்களின் மொழியில் 'கங்காரு' என்றால் 'எனக்குத் தெரியாது' என்று அர்த்தம். இது கேப்டன் குக்கிற்குத் தெரியாது. அப்பெயரே கங்காருவிற்கு நிலைத்து விட்டது.

◦ ரோஜா அத்தர் தயாரிப்பிற்குப் புகழ் பெற்றது பல்கேரியா. ரோஜா இதழ்களிலிருந்து எடுக்கப்படும் அத்தர் எண்ணெய் வாசனைத் திரவியங்கள் தயாரிக்கப் பயன்படுகிறது. உலகிலேயே மிகப் பெரிய ரோஜாத் தோட்டம். மத்திய பல்கேரியாவில் உள்ளது. ஒரு கிராம் அத்தர் தயாரிக்க சுமார் 30,000 ரோஜா இதழ்கள் தேவைப்படுகிறது.

◦ முதன் முதலாகத் தபால் மூலம் அனுப்பப்பட்ட கடிதம் ஸ்பெயின் நாட்டைச் சேர்ந்த டாக்டர் டியாகோ ஆல்வாரேஸ் சான்கோ என்பவர் இசபெல்லா சான் டாமின்கோ என்ற துறைமுகத்திலிருந்து செர்விலி நகர சபைக்கு ஒரு கடிதம் எழுதினார். அதுதான் முதன் முதலாகத் தபால் மூலம் அனுப்பப்பட்ட கடிதமாகும். 1494 பிப்ரவரி 2-ஆம் தேதி அனுப்பப்பட்ட அக் கடிதம் ஏப்ரல் 8-ஆம் தேதி போய்ச் சேர்ந்தது.

◦ ஜப்பான் ஏர்லைன்ஸ் நிறுவனம் உடல் ஊனமுற்றோருக்காக தனி ரிசர்வேசன் செய்ய முன்வந்துள்ளது. வாய் பேச முடியாதவர்கள் FAX மூலம் ரிசர்வேசன் செய்து கொள்ளலாம். இதற்காக டோக்கியோ விமான நிலையத்தில் தனி கவுன்ட்டர் திறக்கப்பட்டுள்ளது. விமானத்தில் என்னென்ன உணவு பறிமாறப்படும் என்பதைப் பார்வையற்றோர், பிரெயில் முறையில் எழுதப்பட்ட மெனு கார்டு மூலம் தெரிந்து கொள்ளவும் வசதி உண்டு.

அனைத்து மக்களின் தகவல்-தொடர்பு சாதனமாக விளங்குவது அஞ்சல் துறை. அத்துறையின் ஆண்டறிக்கை தரும் சில தகவல்கள்:

◦ வரியோருக்கும் வரப்பிரசாதமாக உள்ள தகவல் சாதனம் அஞ்சல் அட்டை. அதன் விலை 15 காசுகள் தான் என்றாலும், முகவரிதாரரிடம் அது சென்றடைவதற்கு, துறைக்கு ஆகும் செலவோ 125 காசுகள். அதேபோல் 75 காசு விலையுள்ள உள்நாட்டுக் கடிதம் சென்றடைவதற்கான செலவு 141 காசுகள் என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன்.

◦ சரியான முகவரி இல்லாதது போன்ற காரணங்களால் 31.2 மி. கடிதங்கள் அஞ்சலகத்திற்கே திரும்பி வந்தன. இத்தகைய கடிதங்களை மட்டும் கையாள்வதற்கு 15 அலுவலகங்கள் உள்ளன. இவற்றின் முயற்சியால் இவற்றுள் 57 சதவிகித கடிதங்கள் பட்டுவாடா ஆகின; 26 சதவிகிதம் எழுதியவருக்கே திருப்பி அனுப்பப் பட்டன.

—ஸ்வீட்லின் பிரபாகரன்

## அஞ்சல் தகவல்கள்

◦ பாதுகாப்புப் படையினருக்காக மட்டும் 500 இராணுவ அஞ்சலகங்கள் செயல்படுகின்றன.

◦ தமிழகத்தின் நகர்ப்புறங்களில் 2,043 கிராமப்புறங்களில் 10,007 என ஆக மொத்தம் 12,050 அஞ்சலகங்கள் உள்ளன (31.3.92). இவை சராசரியாக 10.78 சதுர கி.மீ. பகுதிக்குச் சேவை புரிகின்றன.

◦ உத்தரப்பிரதேசத்தில் மிக அதிகமாக 19,366 அஞ்சலகங்களும், இலட்சத் தீவுகளில் மிகக் குறைவாக ஏழே ஏழ அஞ்சலகங்களும் உள்ளன.

# நூலகம்

—கவிஞர் முருகுவண்ணன்

அறிவியல் பல்கலை ஞானம் தரும்;
அருமை - புதுமை நூல்கள் உண்டு!
அறநெறி வாழ்க்கைப் பாடம் சொல்லும்
அரிய - பழைய நூல்கள் உண்டு!

நாளும் சென்று படித்திடலாம்;
நல்லவர் - வல்லவர் ஆகிடலாம்!
வாழும் நெறிமுறை அறிந்திடலாம்;
வையமும் - வானமும் அளந்திடலாம்!

நூலக உறுப்பினர் ஆகிடலாம்;
நூல்களை வீட்டுக்கும் கொணர்ந்திடலாம்!
நூலினைப் படித்தபின், தந்திடலாம்;
நூல்பல படித்த பயன்பெறலாம்!

பணம் தந்து வாங்கிட முடியாத
இதுவரை படித்தே அறியாத
பயன்தரும் நூல்கள் ஆயிரமே
படித்திட பலர்க்கும் நூலகமே!

வீட்டுக்கு வீடு நூலகமே
கட்டாயம் இருக்க வேண்டுவமே!
நாட்டினில் அனைவரும், நூலகமே
நாட்டினால் கற்றவர் ஆகுவமே!





# பார் போற்றும் பத்தமடைப் பாய்!

திருநெல்வேலியிலிருந்து 22 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது பத்தமடைக் கிராமம். இந்தக் கிராமத்தில் பிரபலமான தொழில் பாய் பின்னுதல் ஆகும்.

பத்தமடைப் பாய் உலகப் பிரசித்தி பெற்றது தாமிரபரணி ஆற்றங்கரையில் கிடைக்கும் கோரைப் புல்லிலிருந்து இந்தப் பாய்கள் பின்னப்படுகின்றன. தற்சமயம் இந்தக் கோரைப் புல்லின் தரம் சரியில்லாத காரணத்தால், கரூர் நகரிலிருந்து கோரைப் புற்களை வாங்குவதாகக் கூறுகிறார் இந்தப் பாய் வியாபாரத்தில் பிரபலமடைந்துள்ள திரு. ஏ.எஸ். பீர் முகமது.

1946-இல் அப்போதைய சென்னை மாகாண ஆளுநரான ஆர்ச்பால்ட் பத்தமடையிலுள்ள இவருடைய பாய் விற்பனை நிலையத்துக்கு விஜயம் செய்து பாய் பின்னும் முறையை நேரில் கண்டறிந்திருக்கிறார். இலண்டனில் 1953-இல் நடைபெற்ற இராணி எலிசபெத்தின் முடிசூட்டு விழாவுக்கு உயர்தரமான பாய் ஒன்றினை அன்பளிப்பாக அனுப்பினாராம் திரு. பீர் முகமது. இதைத்தவிர இந்தியா மற்றும் வெளிநாட்டிலிருந்து பிரபலமான தலைவர்கள் திருநெல்வேலிக்கு வந்தபோது, இவருடைய விற்பனை நிலையத்துக்கும் வருகை புரிந்துள்ளனர்

இங்கு ரூ.15-லிருந்து ரூபாய் 700 வரை மதிப்புடைய பலதரப் பட்ட வண்ணங்களில் பாய்கள் செய்யப்படுகின்றன. 11″ × 18″ அளவுடைய மேசைக்குப் பயன்படுத்தப்படும் பாய் முதல் 3′ × 6′ அளவிலான படுக்கைப் பாய்வரை பல அளவுகளில் பாய்கள் பின்னப்படுகின்றன. பூஜா பாய், உட்காரும் பாய், மடிக்கும் பாய், சாதர்ரண ரகம், கல்யாணப் பட்டுப் பாய் உட்பட பல ரகங்கள் இங்குத் தயாராகின்றன.

கோடை காலங்களில் மெத்தையின் மேல் பயன்படுத்துவதற்காக 2½′ × 6′ அளவுள்ள உயர்ரக மென்மையான பாய் இங்கு தயாரிக்கப்படுகிறது. இதன் விலை ரூ.700. இதைத் துணிபோல சிறியதாக மடித்து பெட்டிக்குள் வைத்து எடுத்துச் செல்லலாம். இத்தகைய உயர்ரகப் பாய் இந்தியாவிலேயே இந்த ஒரு இடத்தில்தான் செய்யப் படுவதாகக் கூறுகிறார் திரு. பீர் முகமது.

மூலப்பொருளான கோரையின் விலை ஒரு சுமைக்கு ரூ.180-லிருந்து ரூபாய் 300 வரை தரத்துக்கு ஏற்ற மாதிரி கிடைக்கிறது. ஒரு சுமை 60 கி.கி. எடை கொண்டதாகும். 40 நபர்களைக் கொண்ட இவருடைய குடும்பமே இந்தத் தொழிலில் ஈடுபட்டிருக்கிறது. பாய் பின்னுவதற்கு எந்தவிதமான எந்திரங்களும் பயன்படுத்தப்படுவதில்லை. எல்லாமே கையினால் தயாரிக்கப்படுகிறது.

கல்யாணக் காலங்களில்தான் நல்ல வியாபாரம் நடைபெறுகிறது. தற்சமயம் மிக உயர்ரகமான பாய் (Super fine mat) செய்யத் தகுந்த ஆட்கள் கிடைக்காததால், தேவைகள் அதிகம் இருந்தும் தன்னால் தயாரிக்க முடியவில்லை என வருத்தப்பட்டார் அவர்.

இங்குத் தயாராகும் பாய்கள் பூம்புகார் விற்பனை நிலையம் மூலம் விற்பனை செய்யப்படுகின்றன.

முன்னாள் பிரதமர்கள் பண்டித நேரு, ராஜீவ் காந்தி ஆகியோர் இங்கு வருகை புரிந்துள்ளனர்.

முன்னாள் குடியரசுத் தலைவர் டாக்டர் ராஜேந்திர பிரசாத், தற்போதைய உதவிக் குடியரசுத் தலைவர் கே.ஆர். நாராணயன், மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா ஆகியோருக்கு, இவர் அழகிய பாய் தயாரித்து அனுப்பி இருக்கிறார்.

ஜே.சி.







# அருங்காட்சியகம் உணர்த்தும் அரிய செய்திகள்

பண்பாட்டுக் கல்வி நிறுவனங்களில் அருங்காட்சியகங்கள் ஒரு மேலான இடத்தை வகிக்கின்றன. மியூசியம் என்ற சொல் கிரேக்க மொழியிலிருந்து வந்ததாகும். தேவதைகளின் இருப்பிடம் என்பது அதன் பொருள். அந்தத் தேவதைகள் கலைஞர்களுக்கும் அறிஞர்களுக்கும், உற்சாகத்தைக் கொடுத்தன என்று நம்பப்பட்டது. எனவே இத்தேவதைகளை கல்விக்கு அதிபதிகள் எனக் கொண்டனர்.

இதிலிருந்து அருங்காட்சியகங்களைக் கல்வி வளர்ச்சிக்கும் ஆராய்ச்சிக்கும் உரிய இடமாகக் கொள்ளலாம்.

பண்டைக் காலத்தில் அரச குடும்பத்தினருக்குப் பயன்படும் வகையில் சித்திரசாலைகள் அமைக்கப்பட்டன. கி.பி. 16-ஆம் நூற்றாண்டிலும் 17-ஆம் நூற்றாண்டிலும் ஐரோப்பாவில் விசித்திரப் பெட்டிகள் அமைக்கப்பட்டன. அவை பொது மக்களுக்குப் பயன்படவில்லை. அரசு குடும்பத்தினருக்கும் பணக்காரக் குடும்பத்தினருக்கும் பயன்பட்டன. ஆனால் கி.பி.19-ஆம் நூற்றாண்டில் அருங்காட்சியகங்கள் மக்களின் மகிழ்ச்சிக் காக மட்டும் அல்லாமல் ஆராய்ச்சி நிலையங்களாகவும் மாறின.

அருங்காட்சியகங்கள் பல வகைப்படும். அவை வரலாற்று அருங்காட்சியகம், தொல்பொருள் அருங்காட்சியகம், கலை அருங்காட்சியகம், அறிவியல்-தொழில்நுட்ப அருங்காட்சியகம், உயிரியல் அருங்காட்சியகம், நகர அருங்காட்சியகம், மாவட்ட அருங்காட்சியகம், புகழ்பெற்ற மனிதர்கள் அருங்காட்சியகம், பல்கலைக்கழக அருங்காட்சியகம், கல்லூரி அருங்காட்சியகம்,, பள்ளி அருங்காட்சியகம் எனவும் மேலும் பல புதிய அருங்காட்சியகங்கள் கிளைத்துக்கொண்டு இருக்கின்றன.

கி.பி. 1814-இல் கல்கத்தா அருங்காட்சியகம் நிறுவப்பட்டதைத் தொடர்ந்து கி.பி. 1851-இல் சென்னை எழும்பூரில் உள்ள பாந்தியன் சாலையில் அருங்காட்சியகம் அமைக்கப்பட்டது. இந்த அருங்காட்சியகம், கடலூர், திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர் ஆகிய அருங்காட்சியகங்களுக்கு மத்திய அருங்காட்சியகமாக விளங்கியது. ஆனால் சில நாள்கள் கழித்து இந்தக் கிளை அருங்காட்சியகங்கள் மூடப்பட்டன. 1975-ஆம் ஆண்டில் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஓர் அருங்காட்சியகம் திறக்கப்பட வேண்டும் அப்பொழுதுதான் அவ் வட்டார மக்கள் அருங்காட்சியகத்தின் பயனை எளிதில் அறிய இயலும் எனத் தமிழ்நாடு அரசு கருதியது. இதன் காரணமாக ஒவ்வொரு மாவட்டத்தின் தலைநகரிலும் ஓர் அருங்காட்சியகம் எனத் தமிழ்நாடு அரசினால் அமைக்கப்பட்டு வருகின்றது.

1986-இல், கடலூரில் அருங்காட்சியகத்தின் அலுவலகம் துவக்கப்பட்டு, 1989 நவம்பர் 30-ஆம் நாளில் அருங்காட்சியகம் பொது மக்களுக்குத். திறக்கப்பட்டது. இது சென்னை அரசு அருங்காட்சியகத்தின் கிளை என்பதால் பல நோக்குடையதாகும். இங்கே கலை, தொல்பொருள், மானிடவியல், நாணயங்கள், படிமங்கள், இயற்கையியல், அஞ்சல்தலைகள், மரச்சிற்பங்கள் ஆகியவற்றைக் காணலாம்.

கி.பி. 2-ஆம் நூற்றாண்டு முதல் தமிழ் எழுத்து வளர்ந்த முறை அருங்காட்சியகத்தின் வெளிச் சுவரில் எழுதப்பட்டுள்ளது. இதை நெடுஞ்சாலையில் இருந்தே பார்த்து அறியும் அளவில் பெரிதாக எழுதப்பட்டுள்ளது. இந்த அட்டவணை, கல்வெட்டினை அறியும் ஆர்வத்தைத் தூண்டுகிறது எனலாம். இந்தக் கல்வெட்டு எழுத்துக்களுக்கு மேல் பகுதியில், கண்ணாடி இழையினால் செய்யப்பட்ட டைனோசரஸ் என்ற அற்றுப்போன விலங்கின் உருவம் அமைக்கப்பட்டுள்ளது. இதுவரையில் நூற்று இருபது சங்கு, கிளிஞ்சல்களின் வகைகள் சேகரிக்கப் பட்டுச் சிறப்புக் கண்காட்சியாக அமைக்கப்பட்டது. தற்பொழுது ஏழேகால்அடி நீள சாரைப்பாம்பு பதப்படுத்தப் பட்டுக் காட்சியில் காணலாம்.

கடலூருக்கு அருகில் உள்ள குடிகாடு என்ற ஊரிலிருந்து, ரோமானிய கூம்பு வடிவ ஜாடியின் தாக்கம் கொண்ட கூம்பு வடிவ ஜாடிகளும், கோமேதம், அகேட், செவ்வந்திக்கல், பளிங்குகல் போன்ற கற்களில் செய்யப்பட்ட மணி களும், மூலப் பொருள்களும், கோமேதிகக் கல்லில் செய்யப்பட்ட உடைந்த மோதிரம், பர்னை ஓடுகள் ஆகியன மொத்தம் 190 பொருள்கள் சேகரிக்கப்பட்டன. இவைகள் அரிக்கமேட்டில் கிடைத்த தொல் பொருள்களுடன் ஒத்துள்ளதால் குடிகாடும் ரோமானியருடன் தொடர்பு கொண்டிருந்தது எனத் தெளிவாகிறது.

இவைகளை இந்த அருங்காட்சியகம் சேர்த்துள்ளதால் வரலாற்றாய் வாளர்களுக்கும் தொல்லியலாளர்களுக்கும் பெரும் உதவியாக இருப்பதுடன் ரோமானியரின் வியாபாரத் தொடர்பு என்ற வரைபடத்தில் கடலூர் பெறுகின்றது.

உளுந்தூர்பேட்டை வட்டம், சேந்தநாடு என்ற ஊரில் புதையலாகக் கிடைத்த உலோகத் தாலான அருள் மிகு சுப்ரமணியர் சிலை அழகானது; விக்கிரகத்தின் பின்புறம் மயில்

ம. காந்தி
காப்பாட்சியர்
அரசு அருங்காட்சியகம், கடலூர்.

நிற்கின்றது. காட்டுமன்னார்குடி வட்டம், லால்பேட்டையில் இருந்து புதையலாகக் கிடைத்த சத்தியபாமா உலோகச் சிலை நாயக்கர் காலத்தது. இதன் கொண்டை அலங்காரமும் இடுப்பு ஆடையும் தனிச் சிறப்புடையன. கடலூர் வட்டத்தில் உலோகத்தாலான காளி, தேவி சிறிய பிரபை ஆகியவை புதையலாகக் கிடைத்தவை என அருங் காட்சியகத்தில் பெறப்பட்டன.

திருக்கோவிலூர் வட்டம் தனக் கனந்தல் காட்டுநாயக்கன் இளைத்த வரிடம் மணமக்களை உட்கார வைத்து எடுத்து செல்லும் பல்லக் குப் பெறப்பட்டுக் காட்சியில் கவினுற வைக்கப்பட்டுள்ளது. 140 அஞ்சல் தலைகள் சேகரிக்கப் பட்டன. அவற்றில் இந்திய அஞ்சல் துறையினரால் அளிக்கப்பட்ட பதினைந்து அஞ்சல் உறைகள் அருங் காட்சியகத்தில் அஞ்சல் கூடமாக அமைக்கப்பட்டுள்ளது சிறப்பை அளிக்கின்றது.

தென்னார்க்காடு மாவட்ட ஆட்சித்தலைவர் திரு ஜி. இராம கிருஷ்ணன் அவர்களின் உதவியினால் அனந்தபுரம் கோ. கிருட்டிண மூர்த்தி அவர்கள் கல்வராயன் மலையிலிருந்து புதிய கற்காலத்தைச் சோந்த பதினோரு கல் ஆயுதங் களைச் சேகரித்தளித்தார். இதனால் மாவட்டத்தின் தொன்மையான பண்பாட்டை அறிய எளிதாகின்றது.

செஞ்சி வட்டம், மேல்பாப்பாம் பாடி என்ற ஊரில் இருந்து கலைமலி அம்மிக்கல்லை பொறிஞர் கொடுமுடி ச. சண்முகன் அவர்கள் சேகரித்தளித்தது ஒரு சிறந்த கலைக்கருவூலமாகும். அம்மிக்கல் லின் அடிப்புறம் குடையப்பட்டு நாற்புறங்களிலும் கஜலட்சுமி, நடன கணபதி. பாலகிருஷ்ணன், ஐயனார் தெய்வச் சிற்பங்கள் கவினுற வடிக் கப்பட்டுள்ளன. இந்த அம்மிக்கல் அன்றாட சமையல் பயனுக்கு மட்டு மல்லாமல் பக்தியின் வழியே கலையையும் வளர்த்திருப்பதை அறியலாம். இது கி.பி. 14-ஆம் நூற் றாண்டைச் சேர்ந்தது. காட்டு மன்னார்குடி வட்டம், கொல்லி மலை மேல்பாதியில் இருந்து புதைய லாகப் பெறப்பட்ட வெள்ளைக் கல்லில் நேர்த்தியாக வடித்த விஷ்ணு சிலை கி.பி. 12-ஆம் நூற்றாண் டைச் சேர்ந்ததாகும்.

கடந்த, இரண்டாண்டுகளில் இந்த அருங்காட்சியகம் மாணவ-மாணவிகளுக்கு இரண்டு ஓவியப் பயிற்சிகளையும் ஒரு புகைப்படப் பயிற்சியையும், இந்தியக் காசுகளை அறிதல் பயிற்சியும் நடத்தியது. ஓவியப் பயிற்சியில் பயின்ற மாணவர் மாவட்ட, மாநில, பன்னாட்டு அளவில் ஓவியப் போட்டியில் கலந்து கொண்டதுமல்லாமல் முதல், மூன் றாம் பரிசுகளைப் பெற்றுள்ளனர்.

திருப்பாதிரிப்புலியூரின்கண் அமைந்துள்ள அரசினர் பெண்கள் மேனிலைப் பள்ளியின் மாணவி எம். உமா, கலைக் கழகம் நடத்திய ஓவியப் போட்டியில் இரண்டு முதல் பரிசுகளைப் பெற்றுள்ளார். கடலூர் ரோட்டரேக்டின் ஓவியப் போட்டியிலும் பாண்டிச்சேரி என்.ஐ.ஐ.டி.யின் ஓவியப் போட்டியிலும் முதல் பரிசுகளை வென்றுள் ளார்.

கடலூர் ஏ.ஆர்.எல்.எம். மெட்ரி குலேஷன் மேனிலைப் பள்ளியின் ஜி.விஜய் கிருஷ்ணா என்ற மாணவர் இந்தியன் ஓவர்சீஸ் வங்கி நடத்திய 1992 குழந்தைகள் நாள் ஓவியப் போட்டியில் கலந்து கொண்டு மேன்மைத் தகுதிச் சான்றிதழைப் பெற்றுள்ளார். கடலூர் ரோட்ரேக் டின் ஓவியப் போட்டியில் மூன்றாம் இடத்தைப் பெற்றார். பாண்டிச் சேரி என்.ஐ.ஐ.டி.யின் ஓவியப் போட்டி, கடலூர் கலைக்கழக ஓவியப் போட்டி, இந்து நாளிதழின் இளைஞர் உலக ஓவியப் போட்டி, சங்கர் பன்னாட்டு ஓவியப் போட்டி ஆகியவற்றில் கலந்து கொண்டார். மேலே குறிப்பிடப்பட்ட இருவரும் தமிழ்நாடு அரசின் ஓவியத் தேர்வு எழுதியுள்ளனர் என்பது குறிப்பிடத் தக்கதாகும்.

பாபா மெட்ரிகுலேஷன் மேனிலைப் பள்ளியின் மாணவன் பி. சுபாஷ், கடலூர் ரோட்ரேக்டின் ஓவியப் போட்டி, பாண்டிச்சேரியின் என்.ஐ.ஐ.டி.யின் ஓவியப் போட்டி, தென்னார்க்காடு மாவட்ட விளையாட்டுக் குழு நடத்திய போட்டி ஆகியவற்றில் கலந்து கொண்டு ஒரு முதல் பரிசையும், ஓர் இரண்டாவது பரிசையும் பெற் றுள்ளான். இவ்வாறான போட்டி களில் மாணவர்கள் கலந்துகொண்டு பரிசுபெறும் வாய்ப்பைப் பெற அரசு அருங்காட்சியகம் நடத்திய ஓவியப் பயிற்சி வழிகாட்டியாக இருந்தது என வெற்றியடைந்த மாணவர்கள் தெரிவித்தனர். புகைப் படப் பயிற்சியில் பங்குபெற்ற இரண்டு பெண்கள் புகைப்படத் தொழிலைப் பொழுது போக்காகக் கொண்டுள்ளனர். கடலூர் பெரியார் கல்லூரியின் தமிழ்த்துறைத் தலைவருடைய மகள் இந்தப் பயிற்சியில் பங்குபெற்றது வேலைவாய்ப் பற்ற இந்த நாள்களில் தாமே வேலையைத் தேடிக் கொள்ள வாய்ப்பளித்ததாகும் எனப் பெருமை யுடன் தெரிவித்தார்கள். 1990-1992 கால கட்டத்தில் கடலூர் அரசு அருங்காட்சியகம் வெவ்வேறு வகையான பதின்மூன்று கண்காட்சி களை நடத்தியது.

### மன்னார் கோயில்

நெல்லை நாட்டு அம்பாசமுத்திர வட்டத்தில் மன்னார்கோயில் என்ற ஊர் உள்ளது. அழகிய மன்னார் என்னும் திருநாமமுடைய பெருமாள் அங்குக் கோயில் கொண்டிருத்தலால் மன்னார் கோயில் என்று அது பெயர் பெற்றதென்பர். பிற்காலத்தில் இராஜேந்திர சோழ விண்ணகரம் என்னும் திருக் கோயிலும் அவ்வூரில் எழுந்தது. அக் கோயிலைக் கட்டியவன் இராஜசிம்மன் என்ற சேர மன்னன். அவன் இராஜேந்திரனுக்கு அடங்கி ஆட்சி புரிந்தமையால் சோழ மன்னன் பெயரை அவ்விண்ணகரத்துக்கு அளித்தான் போலும்!

'ஊரும் பேரும்' என்னும் நூலில்,
டாக்டர் ரா.பி. சேதுப்பிள்ளை.



# தஞ்சை மண்ணில் தந்தை பெரியார் பிறந்த நாள் விழா

தேசத்தலைவர்களின் பிறந்த நாள் விழாக்களைச் சென்னையில் நடத்துவதோடல்லாமல், மாவட்டத் தலைமையிடத்திலும் நடத்திட வேண்டும் என்ற மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் ஆணைப்படி, தஞ்சாவூரில் தந்தை பெரியாரின் பிறந்த நாள் விழா *16.10.93* அன்று நடைபெற்றது.

சட்டமன்ற உறுப்பினர்கள் திரு கு. தங்கமுத்து, திரு இராம நாதன், திரு ப. கலியபெருமாள், திரு கே. பாலசுப்ரமணியன், திரு வை. புண்ணியமூர்த்தி ஆகியோர் விழாவில் கலந்துகொண்டார்கள்.

மாண்புமிகு நிதி அமைச்சர் டாக்டர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் விழாவில் தந்தை பெரியாரின் திருவுருவப் படத்தைத் திறந்துவைத்து விழாப் பேருரையாற்றி, நலிந்தோர்க்கு நலத்திட்ட உதவிகள் வழங்கினார்.

விழாவில் மாண்புமிகு நிதி அமைச்சர் டாக்டர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் பேசும்போது, ''தந்தை பெரியார் அவர்கள் பெண்ணுரிமை, தீண்டாமை ஒழிப்பு, மூடப்பழக்க வழக்கங்களை அகற்றுதல், கல்வி அறிவு, சிக்கனம், விதவைத் திருமணம், சீர்திருத்தத் திருமணம் போன்ற சமுதாயப் பிரச்சினைகளுக்காக, தனது வாழ்நாள் முழுவதும் தமிழ்நாட்டிலுள்ள அனைத்துக் கிராமங்கள், நகரங்களுக்குச் சென்று மக்களின் உணர்ச்சிகளைத் தட்டி எழுப்பினார். உலகத்தில் எத்தனையோ சிந்தனைவாதிகள் சீர்திருத்தவாதிகள் தோன்றி இருந்தாலும் தந்தை பெரியார் போல் தமிழ்நாட்டிலுள்ள அனைத்துப் பகுதிகளுக்கும் சென்று நேரிடையாகவே மக்களைச் சந்தித்து துணிந்து தனது கருத்துக்களை யாரும் கூறியது இல்லை''.

''தநதை பெரியார் அவர்கள் மக்களிடம் தனது வாழ்நாளில் சிக்கனத்தைப் பற்றி எப்போதும் விளக்கமாகக் கூறவார். கருமியாக



இல்லாமலும், கஞ்சனாக இல்லாமலும் செலவு செய்ய வேண்டிய இனங்களுக்கு மட்டும் செலவு செய்யவேண்டும் என்று மக்களுக்குக் கூறியதோடல்லாமல் தானும் அது போல் சிக்கனத்தைக் கடைப்பிடித்தார்.''

மேலும் கேரளாவில் உள்ள வைக்கத்தில் தாழ்த்தப்பட்டோர் கோவிலுக்கு செல்வதற்குப் போராடி வெற்றிபெற்றது இந்திய வரலாற்றில் பொன் எழுத்துக்களால் பொறித்து போற்றிட வேண்டிய ஒரு நிகழ்ச்சியாகும். இதுவரையிலும் 16 மாவட்டங்களில் தந்தை பெரியார் நூற்றாண்டு நினைவுத் தூண்கள் நிறுவப்பட்டுள்ளன. மற்ற 7 மாவட்டங்களில் விரைவில் நிறுவப்படும்'' என்று தெரிவித்தார்.

விழாவில் மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் 2,360 நபர்களுக்கு 45 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள நலிந்தோர் நலத் திட்ட உதவிகள் வழங்கினார்.

மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் திரு எஸ்.டி.சோமசுந்தரம் அவர்கள் தந்தை பெரியார் பற்றிய பேச்சுப் போட்டி கட்டுரைப் போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவ மாணவியர்களுக்குப் பரிசுகள் வழங்கி விழாப் பேருரையாற்றும் போது, ''அறியாமையையும், மூடப் பழக்க வழக்கங்களையும் மக்களிடமிருந்து அறவே நீக்கிட தமது வாழ்நாள் முழுவதும் பாடுபட்டவர் தந்தை பெரியார் அவர்கள், அவர் எடுத்துச்சொன்ன கருத்துக்களை நாம் பின்பற்ற வேண்டும்'' என்று கூறினார்.

மாண்புமிகு செய்தி விளம்பரத் துறை அமைச்சர் திரு மு.தென்னவன் அவர்கள் தலைமை உரையாற்றிப் பேசும்போது, ''உலகத்தில் தோன்றிய சீர்திருத்தவாதிகள் சாக்ரடீஸ் முதல் பிரஞ்சுப் புரட்சிக்கு வித்திட்ட ரூஸோ, வால்டேர் போன்றவர்கள், அவர்களுக்குப் பின்னர் உலகில் பல்வேறு நாடுகளில் தோன்றிய சமுதாயச் சீர்திருத்தவாதிகளின் கொள்கைகள் அவர்கள் வாழ்ந்த காலங்களில் மக்களால் ஏற்றுக்கொள்ளப்படவில்லை. ஆனால், விதிவிலக்காக நமது தமிழ் மண்ணில் தோன்றிய பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியாரின் சமுதாயச் சீர்திருத்தக் கருத்துக்கள் அவர் வாழ்ந்த காலத்திலேயே மக்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டதோடு மட்டுமல்லாமல், அரசும் அத்தகைய கருத்துக்களை ஏற்றுக்கொண்டது போல் உலகில் எங்கும் நடைபெறவில்லை. இது இந்த மண்ணுக்கும், இந்த மக்களுக்கும் கிடைத்த பெருமை ஆகும்'' என்றார்.

மாவட்ட ஆட்சித்தலைவர் திரு தி.சண்முகராஜேஸ்வரன், இ.ஆ.ப., அவர்கள் சிறப்புரை ஆற்றவும், செய்தி-சுற்றுலாத்துறை துணை இயக்குநர் (மக்கள் தொடர்பு) திரு மா. விஸ்வநாதன் வரவேற்புரையும், செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்; திரு த. இளங்கோவன் நன்றியுரையும் கூறினார்கள். விழாவில் சோழன் போக்குவரத்துக் கழகத்தினரின் மெல்லிசை நிகழ்ச்சி நடைபெற்றது.

3.ஆம் பக்கத் தொடர்ச்சி

மகாராஷ்டிர மாநில நிலநடுக்கும்:
மலையென நிதி குவிந்தது!



தமிழ்நாடு திரையரங்கு உரிமையாளர் சங்கத் தலைவர் திரு. டி. ராமானுஜம்



டாக்டர் ராமமூர்த்தி மலர் ஹாஸ்பிடல் சார்பில்...



மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி நிறுவனங்கள் சார்பில் திரு. பங்காரு அடிகளாரின் மகன், பொருளாளர் திரு. ஏ.கே. வெங்கடசாமி

திரு. நல்லி குப்புசாமி.





டாக்டர் எம்.ஏ.எம். ராமசாமி



டாக்டர் கே. சொக்கலிங்கம் (தேவகி மருத்துவமனை சார்பாக)



அப்பல்லோ மருத்துவமனையின் தலைவர் டாக்டர் பிரதாப் சி. ரெட்டி.

திரு. விஜி பிரேக்ஸ் இந்தியா லிமிடெட் அண்டு டாக்டர் எஸ். ரங்கராஸ் இந்தியா மோட்டார் பார்ட்ஸ் அண்டு ஆக்ஸிலெரி லிமிடெட் சார்பில்...





'தினத்தந்தி' அதிபர் திரு. பா. சிவந்தி ஆதித்தன்.



திரு. பி. ஒபுல் ரெட்டி.



சக்தி சுகர்ஸ் சார்பாக திரு. எம். மாணிக்கம்.



ஈரோடு திரு. எஸ்.கே. மயில்சாமி.



திரு. அப்துல் அலி, திருமதி அப்துல் அலி மற்றும் திருமதி ராம்.



திரு. கமலஹாசன்.

திரு. விஜயகாந்த்.



## ◉ மருந்துப் பொருட்களும், பொருளுதவியும் குவிந்தன!



தலைமைச் செயலகப் பணியாளர்கள் சங்கம் சார்பில் அதன் தலைவர்.



'என்கோஃபெட்' நிறுவனத் தலைவர் திரு. செல்லமுத்து.



திரு. சபேசன், திரு. சடகோபன் டி.டி.கே. பார்மா சார்பில்...

நரிக்குறவர் சமூகத்தின் சார்பில் திரு. ரகுபதி.





விஜயா மருத்துவ மற்றும் அறக்கட்டளை சார்பில் திரு. பி. நாகிரெட்டி.



அசோக்லேலண்ட் நிறுவன ஊழியர்கள் சங்கம் சார்பில் திரு. அய்யப்பன்பிள்ளை.



தமிழ்நாடு தேவர் பேரவைத் தலைவர் திரு. ஏ.சி. சின்னசாமி.

அரசுத்துறை வழக்கறிஞர்கள் மற்றும் அ.இ.அ.தி.மு.க.வைச் சேர்ந்த வழக்கறிஞர்கள்.





திரு. சரத்குமார்.



திரைப்பட இயக்குநர் திரு. பி. வாசு



டாக்டர் பழனி ஜி. பெரியசாமி



திரு. வஸந்த்லால் மேத்தா



'மக்கள் குரல்' ஆசிரியர்
திரு. எம். சண்முகவேல்.
ஆர்.கே. குமார்



திரு. எம்.வி. அருணாசலம்



திரு. எஸ்.வி. பாலசுப்பிரமணியம்



திருமதி ஒய்.ஜி. பார்த்தசாரதி

'நியூஸ் டுடே' ஆசிரியர்
திரு. டி.ஆர். ஜவஹர்.

திரு. எம். சுந்தரம்.









மகாராஷ்டிர மாநில நிலநடுக்கம்

# மாண்புமிகு முதல்வர் அவர்கள் சார்பில் ரூ.2.43 கோடி வழங்கப்பட்டது!

மகாராஷ்டிரா மாநிலத்தில் கடுமையான நில நடுக்கம் ஏற்பட்டதை அறிந்தவுடன் மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் நில நடுக்கத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவி புரியவும், நிவாரணப் பணிகளை மேற்கொள்ளவும் தமிழக அரசின் சார்பாக 10 இலட்சம் ரூபாயை உடனடியாக வழங்கினார்.

2.10.1993 அன்று 'தமிழக முதலமைச்சரின் மகாராஷ்டிரா மாநில நிலநடுக்கத்தால் பாதிக்கப் பட்டவர்களுக்கான நிவாரண நிதி' என்ற ஒரு நிதியைத் தொடங்கி வைத்து தனது சொந்த சார்பில் ரூபாய் ஒரு இலட்சமும் வழங்கினார்.

மாண்புமிகு முதல்வர் அவர்கள், இந்த நிதிக்குத் தாராளமாக வாரி வழங்கும்படி விடுத்த அன்பான வேண்டுகோளைத் தொடர்ந்து, பல்வேறு தரப்பட்ட துறையைச் சேர்ந்த பொது மக்கள் இந்த நிதிக்குத் தங்களால் இயன்ற அளவு மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் வழங்கினார்.

2.10.1993 அன்று ஆரம்பித்து வைக்கப்பட்ட இந்த நிவாரண நிதியில், இதுவரை (22.10.93) 2.33 கோடி ரூபாய் குவிந்துள்ளது. ஆக, தமிழக அரசின் சார்பாகவும், தமிழக மக்களின் சார்பாக வும் மகாராஷ்டிரா மாநில நிலநடுக்கத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கான நிவாரண நிதிக்கு 2.43 கோடி ரூபாய் கொடுக்கப்படுகிறது.

மாண்புமிகு மகாராஷ்டிய முதலமைச்சர் திரு சரத் பவார் அவர்களுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு, தனது சார்பாக மாண்புமிகு நிதித்துறை அமைச்சர் டாக்டர் நெடுஞ்செழியன் அவர்களையும், மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் திரு எஸ். கண்ணப்பன் அவர்களையும் நிவாரண நிதியுடன் அனுப்பி வைப்பதாக தெரி வித்து இருந்தார். அதன்படி தமிழக அமைச்சர்கள் இருவரும் 24.10.1993(ஞாயிற்றுக்கிழமை)அன்று மகாராஷ்டிர முதலமைச்சர் அவர்களைச் சந்தித்து, தமிழக முதல்வர் அவர்களின் சார்பில் இந்த நிவாரண நிதியை வழங்கினார்கள்.

## மாண்புமிகு மகாராஷ்டிர முதல்வர் அவர்கள் நன்றி

மகாராஷ்டிரா மாநிலத்தில் நில நடுக்கத்தால் பாதிக்கப்பட்டவர்களின் மறுவாழ்வுக்காக, மாண்புமிகு முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் திரட்டிய 2 கோடியே

## புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா இளங்குழந்தைகள் இருதய சிகிச்சைத் திட்டம்



தமிழ்நாட்டில் ஒவ்வொரு ஆண்டும், பிறவியிலேயே ஏற்படுகின்ற இருதயக் கோளாறுகள் காரணமாக, நூற்றுக்கணக்கான குழந்தைகள் இறக்க நேரிடுகிறது. இருதய அறுவைச் சிகிச்சைகள் மூலம் பல குழந்தைகளைக் காப்பாற்ற முடியும். சில குழந்தைகளுக்கு மட்டும் இருதய வால்வு மாற்றமோ அல்லது இருதய இயக்கக் கருவிகள் (Pace maker) பொருத்துதலோ தேவைப் படுகிறது.

இவற்றையெல்லாம் கருத்தில் கொண்டு, மாண்புமிகு முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், குழந்தைகளின் இருதயத்தில் ஏற்படும் கோளாறுகளை நீக்குவதற்குத் தகுந்ததோர் திட்டத்தைச் செயல்படுத்த வேண்டுமென ஆணையிட்டிருந்தார்.

அத்திட்டம் உருவாக்கப்பட்டு, வரும் நவம்பர் 14-ஆம் நாள் குழந்தைகள் தினத்தன்று செயல் படுத்தப்படவுள்ளது. இத்திட்டத்திற்குப் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா இளங் குழந்தைகள் இருதய சிகிச்சைத் திட்டம்' எனப் பெயர் சூட்டப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்தின் கீழ், 1993-94-ஆம் நிதியாண்டில் வரும் 6 மாதக் காலத்தில் 85 குழந்தைகளுக்கு இருதய அறுவைச் சிகிச்சையும், 5 குழந்தைகளுக்கு வால்வு மாற்றம் சிகிச்சையும், 5 குழந்தைகளுக்கு இருதய இயக்கக் கருவி பொருத்தி சிகிச்சையும் அளிக்கப்படும். இந்த நிதியாண்டில் இத் திட்டத்திற்கென 14 இலட்சம் ரூபாய் அனுமதிக்கப்பட்டு செலவிடப்படும்.

இந்தத் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் அறுவைச் சிகிச்சைகள், சென்னை எழும்பூரில் உள்ள குழந்தைகள் நல மருத்துவமனையில் செய்யப்படும்.

## முதலமைச்சரின் பொது நிவாரண நிதி

இன்று (17.10.'93) மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களை, முதல்வர் இல்லத்தில் சந்தித்துப் பல்வேறு தொழிலதிபர்களும், முக்கிய பிரமுகர்களும், தமிழ்நாடு முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்காக காசோலைகளை வழங்கினார்கள்.

அருணா சுகர்ஸ் நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் திரு. எம். சிவராம் 2,00,000/- ரூபாயையும், பாட்டியா ஸ்கைலைன்ஸ் நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் திரு. பாட்டியா நிறுவனத்தின் சார்பாக 1,00,000/- ரூபாயையும், எம்.ஜி.எம். நிறுவனங்களின் சார்பாக அதன் தலைவர் திரு. எம்.ஜி.எம். முத்து 1,00,000/- ரூபாயையும் மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களிடம் வழங்கினார்கள்.

ராஜஸ்ரீ சுகர்ஸ் நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் திருமதி. ராஜஸ்ரீபதி அவர்களின் சார்பாக 1,00,000/- ரூபாயும், தமிழ்நாடு தோல் ஏற்றுமதி இறக்குமதி சிறு வியாபாரிகள் சங்கத்தின் சார்பாக திரு. ரஹீம் அவர்கள் 2,00,000/- ரூபாயும் மாண்புமிகு முதலமைச்சரிடம் முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்காக வழங்கப் பட்டது.

தமிழ்நாடு திரையரங்குகள் உரிமையாளர்கள் சங்கத்தின் சார்பாக அதன் தலைவர் திரு. டி. ராமானுஜம் 50,000/- ரூபாயையும், எஸ்.ஆர்.எம். பொறியியல் கல்லூரியின் சார்பாக அதன் தலைவர் திரு. டி..ஆர். பச்சைமுத்து, 1,00,000/- ரூபாயையும், பாரத் பொறியியல் கல்லூரியின் சார்பாக திரு. ஜகத்ரட்சகன் 1,00,000/- ரூபாயையும் மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களிடம் முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்காக வழங்கினார்கள்.

---

3.3 இலட்ச ரூபாயை, மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்களும், மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் திரு. எஸ். கண்ணப்பன் அவர்களும், மாண்புமிகு மகாராஷ்டிர முதல்வர் திரு. சரத்பவார் அவர்களிடம் வழங்கினார்கள்.

மாண்புமிகு முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களுக்கு நன்றி தெரிவித்த மாண்புமிகு மகாராஷ்டிர முதல்வர் திரு. சரத் பவார் அவர்கள், தமிழக முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களின் பெருந்தன்மை தன் இதயத்தை நெகிழ செய்துவிட்டது என்றுகூறினார்.

தமிழக முதல்வர் அவர்கள் திரட்டிய இந்தத் தொகை, பூகம்பத்தால் பாதிக்கப்பட்ட ஒரு கிராமத்தைச் சீரமைக்கப் பயன்படுத்தப்படும் என்றும் அவர் கருத்து தெரிவித்தார்.

இந்தத் தொகை, தமிழக மக்களின் சார்பில் வழங்கப்பட்டது என்று பதில் அளித்த மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள், இந்தத் தொகையை எவ்வாறு பயன்படுத்துவது பொருத்தம் என்று திரு. சரத்பவார் அவர்கள் கருதுகிறாரோ, அந்த வகையில் பயன்படுத்தலாம்'' என்று கூறினார்.

# பாதுகாக்கப்பட வேண்டிய கருவூலம்!

## பார்த்தோம் படித்தோம்

**16**.9.93 இதழில் தமிழக முதல்வரின் ''ஒப்பற்ற தலைவர் தந்தை பெரியார்'' கட்டுரை; தந்தை பெரியார் பற்றிய பேரறிஞர் அண்ணாவின் சொல்லோவியம், தந்தை பெரியாரைப் பற்றிய திருவிகவின் கருத்து; அண்ணா போற்றிய பெருமக்கள் வரிசையில், திரு.வி.க., வ.உ.சி., பாரதியார், மற்றும் கருத்துச் செல்வம் திருக்குறள்; ''அதிமதுரச் சொல்லுடையார்'' தலைப்பில் 'அண்ணா'வைப் பற்றி, நாவலர் ச. சோமசுந்தர பாரதியாரின் வாழ்த்துரை, இவைகளோடு, 'பெண் உரிமை' போன்ற பல தலைப்புகளில் பெரியாரின் பொன்மொழிகள்; ஆக, தமிழரசு இதழ், இதழாக அல்ல, தமிழ் மலராக மணம் வீசியது. தமிழரசு படிக்க மட்டு மல்ல; பாதுகாக்கப்பட வேண்டிய கருவூலம்.

—சைதை டி.என். நாகலிங்கம்,
பழவந்தாங்கல், சென்னை-600 114.

'அறிவுச்சுடர்' பகுதி உண்மையில் அறிவுக்கு ஒளி காட்டியது. இதுபோன்றவைக்கு ஒரு பக்கம் முழுவதும் எடுத்துக் கொள்ளலாமே!

—இரவிச்சந்திரன்,
நெடிமோதியனூர்.

'குறளின் குரல்' படித்தேன், அருமையாக இருந்தது.

—இன்பவல்லி வாசுதேவன்,
கீரைசாத்து.

விடுதலை வீரர் வ.உ.சி. கட்டுரையில் ''சுதந்திரம் எங்களது பிறப்புரிமை'' என்று இந்தியாவின் வடக்கே எழுந்த முழக்கத்தின் எதிரொலி தென்னாட்டில் திருநெல்வேலிச் சீமையில் சீற்றத்துடன் எதிரொலித்தது என்பதைத் தெரிந்து கொண்டேன்.

—வி. சென்றாயன்,
கருப்பூர், சேலம்-12.

நடக்கவிருக்கும் T.N.P.S.C. துறைத் தேர்வுகள், அவற்றின் நன்மைகள், தகுதிகள் குறித்து தந்தால் மிகவும் பயனுள்ளதாய் இருக்கும்.

—ரவிச்சந்திரன்,
நெடிமோதியனூர்.

''கேள்வி பதில்'' பக்கம் இருந்தால் மிகவும் பயனுள்ளதாக இருக்கும்.

—ரவிச்சந்திரன்,
கடலூர்.

**1**.10.93 இதழில், பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம் - பாடலும் படிப்பினையும் கட்டுரை பயனுள்ள தாக இருந்தது.

—சுந்தசுவாமி,
திருப்பூர்.

தருமபுரி மாவட்டம் பாலக்கோட்டில் அரசு நலத் திட்ட உதவி வழங்கும் விழாவில், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் உரை, மாவட்ட மக்களுக்கு ஓர் வரப்பிரசாதம். விடுதலை வீரர் வ.உ.சி. பற்றி ஜீவா மணிகுமார் அவர்கள் நன்கு விளக்கமாக எழுதியிருக் கிறார்.

—இரா. இராகவன்,
ஸ்ரீரங்கம்.

'தமிழரசு' இதழ் நிறைய செய்திகளைத் தருகின்றது. மற்ற பத்திரிகைகளில் வராத செய்திகள் நிறைய வரு கின்றது. இதில் வரும் கட்டுரைகள் யாவருக்கும் பயன் படும் வகையில் உள்ளது.

—சுபி.இமா. சோசப் பேட்ரிக்,
திருச்சி.

**16**.9.93 இதழில், வள்ளுவன் கூறும் பண்புடை மைக் கட்டுரை படித்தேன். மிகச்சிறந்த கட்டுரை. இதுபோன்ற கட்டுரை ஒவ்வொரு இதழிலும் தொடர்ந்து வருதல் வேண்டும் 'தமிழரசு' ஒரு ''அறிவுக் களஞ்சியம்'' என்றால், அது மிகையல்ல.

—கெ. அனந்த நாராயணன்,
கன்னியாகுமரி.

## வரும் இதழ்களில்...

'புரட்சித் தலைவியின் முழக்கம்' நூல் வெளியீட்டு விழாவில் நடந்த பட்டிமன்ற, கவியரங்க நிகழ்ச்சிகளில் பங்கேற்ற அறிஞர்கள், கவிஞர்கள் ஆகியோரின் கட்டுரைகள், கவிதைகள் வரும் இதழ்களில் இடம்பெறும் என்பதை மகிழ்ச்சி யுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

# அன்னை சந்தியா



கோவை பீளமேட்டில் அவினாசி ரோட்டை யொட்டி அன்னை சந்தியா சிறுவர் உலகம் (சிறுவர் கல்வி பொழுதுபோக்கு வளாகம்) ரூ.11 கோடி செலவில் அமைக்கப்பட்டுள்ளது. இதற்கான அடிக்கல் நாட்டு விழா, கோவை ஆர்.எஸ். புரம் மாநகராட்சிக் கலையரங்கில் 21.10.93 அன்று மாலை மிகச் சிறப்பாக நடந்தது.

விழாவுக்கு மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் திருமதி இந்திரகுமாரி அவர்கள் தலைமை தாங்கினார். மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் கலந்து கொண்டு சிறுவர் உலகத்திற்கான அடிக்கல்லை நாட்டினார். அப்போது அவர் பேசுகையில் குறிப்பிட்டதாவது:

''கோவை பீளமேட்டில் சிறுவர் உலகம் அழகாக அருமையாகத் தெளிவாக மற்றும் பயன் தரும் வகையில் அமைய உள்ளது. இந்தச் சிறுவர் உலக அடிக்கல்லை 73 வயது நிரம்பிய சிறுவனான என்னை வைத்து நாட்ட வைத்து இருக்கிறார்கள்.

''இந்தச் சிறுவர் உலகம் சுற்றுலா மையமாகவும், சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் வகையில் வேறு எங்கும் இல்லாத வகையில் அமைய உள்ளது. ரூ.11 கோடி செலவில் தொடங்கப்படும் இந்தத் திட்டத்தில் அரசுப் பங்காக நிலமும் மற்றும் தனியாகப் பங்குத் தொகையும் திரட்டப்படும்.

''இங்குப் பேசியவர்கள் நிதிச் சுமை அரசிற்கு இல்லை என்று கூறினார்கள். ஆனால், பங்குதாரர்களுக்கு லாபம் கொடுக்கும்போது கேளிக்கை வரி அரசிற்கு வருமானவரி வருமானமாகக் கிடைக்கும். மற்றும் பல கடைகள் அமைக்கப்படுவதால் விற்பனை வரியாகவும் அரசிற்குக் கிடைக்கும்.

''இந்தச் சிறுவர் உலகத்திற்கு அரசு இப்போது ரூ.1¼ கோடி மதிப்புள்ள 25 ஏக்கர் நிலத்தை வழங்கி உள்ளது. இதற்குப் பின்புறம் உள்ள மேலும் 100 ஏக்கர் நிலத்தைக் கையகப்படுத்த மாவட்ட ஆட்சித்தலைவரிடம் கூறியுள்ளேன். அந்த நிலமும் சிறுவர் உலகத்திற்கு வழங்கப்படும். ஷாஜகான் தாஜ்மகாலைக் கட்டினான். அதற்கு அடுத்தபடியாக எம்.ஜி.ஆர். நினைவு இடத்தைப் புரட்சித்தலைவி செய்துள்ளார். புரட்சித்தலைவியின் சாதனையைப் பார்த்த சிலர், இது என்ன சாதனை, நாங்கள் கூடச்செய்து இருப்போம் என்கிறார்கள். இது எப்படி இருக்கிறது என்றால், அமெரிக்காவைக் கண்டுபிடித்த கொலம்பசுக்கு

# சிறுவர் உலகம்



நடந்த பாராட்டு விழாவின்போது சிலர் ''இது என்ன சாதனை?'' என்று கூறியதுபோல் உள்ளது.

''அமெரிக்காவில் உள்ள 'டிஸ்னி' உலகத்தில் ஆபிரகாம் லிங்கன் சிலையை அவர் பேசுவது போல அமைத்து உள்ளனர். அதேபோல் காந்தி, அண்ணா, புரட்சித்தலைவர் சிலையை இந்தச் சிறுவர் உலகில் அமைக்க வேண்டும்''.

இந்தச் சிறுவர் உலகத்திற்குத் தென்னிந்திய விஸ்கோஸ் தொழிற்சாலை சார்பிலும், திருப்பூர் சக்திவேலு சார்பிலும், பிக்னேசுவரா ஜூவல்லரி சார்பிலும் தலா ரூ.1 இலட்சமும், அன்னபூர்ணா ஓட்டல் சார்பில் 25 ஆயிரமும் பங்குத் தொகையாக வழங்கினார்கள். அவர்களுக்கு மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் சால்வை போர்த்தினார்.

நிலத்திற்கான அரசு ஆணையை, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள், சிறுவர் உலகம் அமைப்புக் குழு இயக்குநர் திரு ஆ. சக்திவடிவேலுவிடம் வழங்கினார். விழாவில் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. சங்கர் வரவேற்று பேசினார்.

மாண்புமிகு அமைச்சர்கள் திரு. கே.ஏ. செங்கோட்டையன், திரு எஸ். கண்ணப்பன், திருமதி ஆர். இந்திரகுமாரி, திரு பி. ஈசுவர மூர்த்தி, சட்டப்பேரவை உறுப்பினர்கள் திரு சிங்கை கோவிந்தராஜ், திரு செல்வராஜ், தமிழ் நாடு மகளிர் மேம்பாட்டு கழக நிர்வாக இயக்குநர் திரு ஜனார்த்தனம் ஆகியோர் பேசினார்கள்.

தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச்சத்துத் திட்ட ஒருங்கிணைப்பாளர் திரு. ஜஸ்பீர் சிங் பஜாஜ் நன்றி கூறினார்.

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு. கே.ஏ. செங்கோட்டையன் அவர்கள் பேசுகையில், ''புரட்சித்தலைவி அவர்கள், தொழில் துறையில் 4-வது இடத்தில் இருந்த தமிழகத்தை, முதல் இடத்திற்குக் கொண்டு வந்துள்ளார். சிறுவர் உலகத்திற்குப் போக்கு வரத்துத்துறை சார்பில் பணம் முதலீடு செய்வது பற்றி முடிவு எடுக்கப்படும்'' என்று கூறினார்.

மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் திருமதி இந்திரகுமாரி அவர்கள் பேசுகையில், ''இந்தச் சிறுவர் உலகம் இந்தியாவில் மட்டும் அல்லாமல் உலகம் முழுவதிலும் சிறந்து விளங்கும். இங்கு வைக்கப்படும் பொருட்களில் ரூ.65 இலட்சம் மதிப்புள்ளவை வெளிநாட்டிலிருந்து வாங்கப்படும். அடுத்த ஆண்டு மே மாதத்திற்குள் சிறுவர் உலகம் அமைக்கப்படும். இதை மாண்புமிகு புரட்சித்தலைவி அவர்கள் திறந்து வைப்பார்கள்'' என்று கூறினார்.

# The Tamil Nadu State Apex Co-Operative Bank Ltd.,

TNSC BANK

233, N.S.C. Bose Road, Madras-600 001.

**Rate of Interest on Deposits (Effective from 2.9.1993**

| Sl.No. | Type of Deposit | Rate of Interest per annum |
|---|---|---|
| 1. | Savings Bank Accounts | 5.25% w.e.f. 1.7.1993 |
| 2. | Fixed Deposits : | |
| | For 46 DAYS and above but upto 270 days | 9.00% |
| | For 271 DAYS and above but upto 364 days | 9.50% |
| | For 1 YEAR and above | 10.25% |

**Interest on Fixed Deposit for 1 year and above will be paid Quarterly**

- NRO & NRE Accounts Facilities are available in 6 designated Branches.
- Interest rates are subject to RBI directives from time to time.

THE BANK AT YOUR SERVICE

மனம் ஒரு மருத்துவர்

# மனநலம்

**மனநல மருத்துவர்
டாக்டர் எஸ். மாத்ருபூதம்
அவர்களின் பதில்கள்**

**ஆர். இராமச்சந்திரன்
விராலிமலை**

**★ மனவியாதியை மருத்துவத்தால் பூரணமாகக் குணப்படுத்த முடியுமா?**

மனநோய்க்கு மருந்துண்டு. மற்ற சிகிச்சை முறைகளும் உண்டு. மனோ வியாதியால் பீடிக்கப்பட்டவர்கள் ஆரம்ப காலத்திலேயே மனநல மருத்துவரை அணுகினால், நிச்சயம் நல்ல பலன்கிட்டும், ஆனால் சில தீவிரமான நோய்கள் எத்துணைச் சிறந்த சிகிச்சை முறைக்குப் பின்னும் முற்றும் குணமாகும் வாய்ப்பில்லை. ஆனாலும், நோயின் பாதிப்பு குறைவதற்காகவாவது, மருத்துவம் அத்தியாவசியம்.

**கா. கிருஷ்ணன்
தஞ்சை**

**★ கிராமங்களில் மனநோய் கண்டவர்களைக் கோவில்களில் கட்டிப் போடுகிறார்களே. இது குறித்து உங்கள் கருத்து என்ன?**

கோவிலாகட்டும், வேறு எங்காகட்டும், மன நோயாளிகளைக் கட்டிப்போடுவது அவர்களைத் துன்புறுத்துவதாகும். மனநோயாளிக்கான விஞ்ஞான பூர்வமான காரணங்கள் கண்டுபிடிக்கப் பட்ட இக்காலத்தில், கோவிலில் கட்டிப்போடுவது சிகிச்சையாகாது. முறையான விஞ்ஞான முறைப் படியான சிகிச்சை செய்பவர்கள் நிச்சயம் அதிகம் முன்னேற்றம் அடைவார்கள். எந்தச் சிகிச்சையும் நன்கு பயனைத்தர, கடவுளை வேண்டுவதில் தவறில்லை. அது அவரவர் நம்பிக்கை. ஆனால், மன நோயாளிகளைக் கோவிலில் கட்டிப் போட்டால் குணமாகும் என நம்புவது மூட நம்பிக்கை.



கே. லதா
பண்ருட்டி

**★ ஹோமியோபதி மருத்துவ முறையில் குண மளிக்க முடியும் என்று கூறப்படுகிறது. இது எவ்வளவு உண்மை?**

இது ஹோமியோபதி மருத்துவரைக் கேட்க வேண்டிய கேள்வி

எல். தெய்வநாயகம்
சுடாரிபட்டி

**★ ஓர் குடும்பத்தில் ஓர் மனநோயாளி இருந்தால், அவரிடம் குடும்பத்தினரின் அணுகுமுறை எவ்வாறு இருக்க வேண்டும்? தயவு செய்து தெரிவிக்கவும்.**

மனநலப் பிணியாளர்களிடத்தில் பாசமும், நேசமும் காட்ட வேண்டும். நோயின் ஆரம்ப காலத்திலிருந்தே முறைப்படி சிகிச்சை செய்ய வேண்டும். அவர்களுடன் பேசாமலும் இருக்கக் கூடாது. கோபதாபங்களைக் காட்டி, வளவள வென்று பேசவும்கூடாது. மனநோய் வந்தாலும், குடும்பத்து மற்ற அங்கத்தினர்களைப் போலவே நடத்த வேண்டும். அவர்களை வீட்டிலோ, வெளியிலோ ஏதாவது ஒரு பணியில் ஈடுபடச் செய்ய வேண்டும். குடும்ப நிகழ்ச்சிகளில் அவருக்கும் பங்கு இருக்க வேண்டும். அவர்கள் ஆக்ரோஷம், பெரும்பாலும் மற்றவர்பால் ஏற்படும் சந்தேகம் அல்லது தனக்கு ஆபத்து விளையுமோ என்ற தவறான நோக்கமே ஆகும். அதற்கு வாய்ப்பில்லாமல் நடந்து கொள்ள வேண்டும். அவர்களை எதற்கும் ஒதுக்கி வைக்கக்கூடாது. மனநோயும், உடல் நோயைப் போலக் குணமடையவல்லது. இதை அனைவரும் உணர வேண்டும். திருமணம் செய்வதாயிருந்தால், மனநல மருத்துவரின் ஆலோசனைக்கப்புறமே, முடிவு செய்யவேண்டும்.

எஸ். கிரிஜா
திண்டுக்கல்

**★ சாமி வந்து பலபேர் ஆடுகிறார்களே? இது அவர்கள் தங்களை அறியாமல் செய்யும் ஒன்றா அல்லது அவர்கள் பலரைக் கவரவேண்டும் என்ற நோக்கத்தில் நடத்தும் நாடகமா?**

சாமி வந்து ஆடுவது ஒருவித ஹிஸ்டிரியோ நோயாகும். Possession State எனக் கூறுவோம். தனது உண்மையான, சிலசமயம் எளிதில் தீர்க்க முடியாத பிரச்சினைகளால் பாதிப்பு ஏற்படும் போது, சிலர், தன்னை ஆண்டவன் ஆட்கொண்ட பாவனையில், இந்நிலைக்கு தள்ளப்படுகிறார்கள். அவர்களது செய்கை, பிறர் கவனத்தைக் கவரும் செய்கை என்பது உண்மையே ஆனாலும், அவர்கள் தன்நிலை உணராத போது தான் இவ்வாறு நடந்து கொள்வார்கள். இந் நோய்க்கு மனநல மருத்துவரை அணுகவும்.

## முதியவர்களைத் தாக்கும் மூளை நோய்

அறுபது வயதைக் கடந்தவர்களை 'அல்ஷைமர் நோய்' என்னும் மூளை பாதிப்பு நோய் தாக்கக் கூடும். இந்த நோய் முற்றினால், மூளையின் செயல்பாடு சிறிது சிறிதாகக் குறைந்து இறுதியில் மரணத்துக்கே வழிகோலிவிடக் கூடும். இப்போது இந்த நோய்க்குப் புதிய மருந்தொன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

எண்பத்தைந்து வயதைக் கடந்தவர்களில் கால்வாசிப் பேர் இந்த நோயினால் பாதிக்கப்படுவதாக ஒரு கணக்கெடுப்பு கூறுகிறது. அன்றியும், 95 வயதைக் கடந்தவர்களை இந்த நோய் இன்னமும் அதிக அளவில் தாக்கக் கூடும்.

இந்த நோயினால் பாதிக்கப்பட்டவர்களின் மூளைச் செல்களில் ''அமிலாய்டு பீட்டா புரோட்டீன்'' என்னும் புரதச் சத்து நுண்ணிய துளைகளை உண்டாக்கி விடுகின்றது. இதனால் இந்த செல்களுக்குள் அதிக அளவில் கால்சியம் கசிந்து, அந்த செல்களை அழித்து விடுகிறது. இதனால் மூளையின் செயல்பாடு படிப்படியாகக் குன்றிப் போய்விடுகிறது.

அல்ஷைமர் நோய்க்கு 'ட்ரோமிதமீன்' என்னும் புதிய மருந்து ஒன்று இப்போது உருவாக்கப்பட்டுள்ளது. இம்மருந்து அமிலாய்டு பீட்டா புரதத்தினால், மூளை செல்களில் ஏற்படும் புரதங்களை அடைக்க வல்லதாகும்.

இதய அறுவைச் சிகிச்சையில் கடந்த முப்பது ஆண்டுகளாக இந்த மருந்து பயன்படுத்தப்பட்டு வருகிறது. தற்போது அல்ஷைமர் நோய்க்கும் இதனை மருந்தாகப் பயன்படுத்தலாம் என்று கண்டறியப்பட்டுள்ளது.

—அமெரிக்கத் தகவல் நிலையம்

மு. தயாளன்
ஈரோடு

**★ 'ஹிப்னாட்டிசம்'மூலம் ஒருவரை வசியப்படுத்த முடியுமா? சில ஹிப்னாட்டிஸ்ட்கள் Personality Disorders-ஐக் குணப்படுத்த தங்களால் முடியும் என விளம்பரங்கள் மூலம் அறிவிக்கின்றனரே?**

ஹிப்னாடிஸம் என்பதே ஒரு மனோவசிய முறைதான். இதைப்பயன்படுத்தி, ஆழ்மன எண்ணங்களை அறியலாம். ஒரு மனதை உடன் படுத்தலாம், சில மனநோயின் அறிகுறிகளைப் போக்கலாம். ஆனால், மனநோய் சம்பந்தப்பட்டவரை, இச்சிகிச்சை முறை ஒரு 'உடன் உதவும்'

(Adjustment to other therapies) சிகிச்சையேயன்றி இதையே முழுதாக ஒரு மனநோயை குணப்படுத்த கையாளக்கூடாது. ஆளுமை மேம்பாடு அடைய (Personality Improvement) 'ஹிப்னோஸிஸ்' உதவும். ஆனால் ஆளுமைசார்ந்த நோய்க்கு (Personality Disorder) அது தீர்வு அல்ல.

கே. கலாவதி
காஞ்சிபுரம்

**★ என் கணவர் நான் என் அலுவலகத்தில் ஆண்களிடம் பேசக்கூடாது என கண்டிஷன் போடுகிறார். நானோ என் அலுவலகத்தில் தொலைபேசி இயக்குபவர். என் கணவரைச் சமாளிப்பது எப்படி?**

உங்கள் கணவர் 100 சதவீதம் நார்மலாக இல்லாதவர். அவருக்குச் 'சந்தேக நோய்' (Paranoid Disorder)இருக்கக்கூடும். அல்லது அவருக்குத் தன் மீதே நம்பிக்கை இல்லாதிருக்கக்கூடும். நீங்கள், அவ்ரை விட அழகாக இருந்தால் ஒரு பொறாமை சார்ந்த அவநம்பிக்கையாலும் (Delusion of Jealousy) அவர் பாதிப்படைந்திருக்கக்கூடும். எதற்கும் மனநல மருத்துவர் உதவியை நாடுதல் நலம்.

பி. இராமசாமி
திருவண்ணாமலை

**★ சமீபத்தில் மகாராஷ்டிரத்தில் பல ஆயிரக்கணக்கான குடும்பங்கள் பூகம்பத்தால் பாதிக்கப்பட்டுள்ளன. இதில் உயிர் தப்பிய பெரும்பாலானோர் முக்கியமாக, குழந்தைகள் ஓர் State of Fear-இல் வாழ்வதாகப் பத்திரிகைகள் கூறுகின்றன். இந்த Social Problem-ஐ சமாளிப்பது எப்படி?**

பூகம்பம், புயல் போன்ற நிகழ்ச்சிக்குப்பின், அதில் தெய்வாதீனமாகத் தப்பியவர்கள் "Past Traumautic Disorder" என்ற மனநோயாலும் "Acute Stree Reaction" என்ற படியும், பாதிக்கப்படக்கூடும். நிவாரணப் பணிகளும், மறுவாழ்வுப் பணிகளும் செவ்வனே நிறைவேற்றப்பட்டால் மன பாதிப்பு குறையும். மிகவும் பாதிக்கப்பட்டவர்கள், மனநல மருத்துவரின் ஆலோசனை பெற்று சிகிச்சை பெறுவது நலம். இதுமாதிரி இடங்களுக்கு ஒரு மாதம் கழித்தாவது, மனநல முகாம் நடத்தி, தீவிர, தொடர்ந்த சிகிச்சை தேவைப்பட்டவர்களைக் கண்டறிந்து ஆவன செய்யலாம்.

எம்.ஏ. காதர்
சேலம்

**★ மதுப்பழக்கத்தை மனநல மருத்துவத்தால் குணப்படுத்த முடியுமா?**

குடிப்பழக்கம் ஒரு நோயாகவே கருதப்படுகிறது. உடலில் உள்ள இரசாயன அமைப்பு மனிதனுக்கு மனிதன் மாறுபடும். கொஞ்சம் குடிக்க ஆரம்பித்து, குடிகாரனாக மாறும் சிலருக்கு இந்த இரசாயன அமைப்பில் கோளாறு இருப்பதாகக் கண்டறிந்துள்ளனர். அவர்கள்



மதுவை விடமுடியாமல், விட்டால் உடல் பாதிப்பு ஏற்படும் வகையில் அவரது மூளை செதில்கள் அமைந்துள்ளன. ஆதலால் குடிப்பழக்கத்தை மாற்ற, நிறுத்த தற்போது நல்ல முறையில் சிகிச்சை செய்யலாம்.

எம். முருகேசன்
கள்ளிச்செட்டிப்பட்டி

**★ மனம் ஒரு குரங்கு. அது இருபக்கமும், தாவித் தாவி மனிதர்களைக் கவலைப்படுத்தும், மகிழ்ச்சியிலும் ஆழ்த்துகிறது. இதை ஒருமுகப்படுத்த மனநலத்தால் முடியுமா?**

**★ பிறந்த 6 மாதக் குழந்தையின் மனநிலை எப்படி இருக்கும்?**

**★ சிறுவயது என்று சொல்லிவந்தால் எதில் போய் முடியும்?**

**★ அனுபவம் பெற்ற மனமும், அனுபவமில்லாத மனமும் உடைய இருவரின் வாழ்க்கை எப்படி இருக்கும்?**

**★ நம்பிக்கை ஒரு மனிதனின் மனதில் இல்லாவிட்டால் எந்த முயற்சியும் செய்ய முடியுமா?**

குரங்கான மனத்துக்குத் தியானம் குரங்காட்டியாய் அமையும். பல்வேறு தியான முறைகள் பற்றி உளவியல் நிபுணர், யோகா நிபுணர் அல்லது மனநல மருத்துவ நிபுணரை அணுகி ஆலோசனை பெறவும். அதுவே கவனச் சிதறலையும் தடுக்கும்.

பிறந்த குழந்தைக்கும் சில உணர்வுகள் உண்டு எனக் கண்டுபிடித்துள்ளனர். அவை பய உணர்ச்சி (Startle-response), அழுகை-வருத்தம், சார்ந்திருக்கும் தன்மை (Dependency) என்பவை போன்ற சிலவாகும்.

திரும்பத் திரும்ப குழந்தை மனதில் ஒரு விஷயத்தைச் சொல்லி வந்தால், அது விதையாகி மரமாகவும் வளரும். நல்லது, கெட்டது இரண்டுக்கும் இது பொருந்தும். ஆனால் மாறுபட்ட கருத்துள்ளவர்களுடன் பழகும் போது, மனமுதிர்ச்சி அடையும்போது, விளைவுகளைச் சீர்தூக்கிப் பார்த்து உதாரணமாக, செல்வத்தைப் பற்றி நல்ல முடிவு எடுக்கவும் நல்ல வாய்ப்பு உண்டு.

அனுபவம் ஒரு நல்ல ஆசான். நல்லதைக் கடைப்பிடிக்கவும், தீயன விடவும், எதையும் சீர்தூக்கிப் பார்க்கும் மனமுதிர்ச்சியையும் அது தரவல்லது. அனுபவமில்லாதவர்களுக்கு இது கடினம். பள்ளியில் படிப்பது ஏட்டுப்படிப்பு. வாழ்க்கையை உணரவைப்பது அனுபவப் படிப்பு.

எந்த முயற்சியும் ஓரளவாவது பலனளிக்கும். ஆனால், நம்பிக்கையோடு சேர்ந்த முயற்சி நிறைந்த பலனை அளிக்கும்.

**தொகுப்பு: எம். ஸ்ரீ நாகேஷ்**

# தமிழ்நாடு அரசுப் பணியாளர்களுக்கு அகவிலைப்படி உயர்வு!

**மா**ண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், இந்திய அரசு அறிவித்த அதே விகிதத்தில், தமிழ்நாடு அரசுப் பணியாளர்களுக்கு 1.7.1993 முதல் ஒரு தவணை அகவிலைப்படி உயர்வு அனுமதித்துள்ளதாக அறிவித்துள்ளார்.

அதன்படி, 3,500 வரை சம்பளம் பெறும் அரசுப் பணியாளர்கள் தற்போது பெற்று வரும் 92 சதவிகித அகவிலைப்படிக்குப் பதிலாக, 97 சதவிகிதம் திருந்திய அகவிலைப்படி பெறுவார்கள். அதேபோல் ரூ.3,500-க்கு மேல் சம்பளம் பெறும் அரசுப் பணியாளர்கள், தற்போது பெற்று வரும் 69 சதவிகித அகவிலைப் படிக்கு மாறாக, 73 சதவிகித திருந்திய அகவிலைப்படி பெறுவார்கள்.

இதன்மூலம் அரசுப் பணியாளர்களுக்கு மாதம் ஒன்றுக்குக் குறைந்தபட்சம் பயன் ரூ.38-ம் அதிகப்பட்சம் பயன் ரூ.228-ம் கிடைக்கும்.

திருந்திய அகவிலைப்படி, உள்ளாட்சி நிறுவனங்கள் மற்றும் அரசு உதவி பெறும் கல்வி நிலையங்களில் பணிபுரியும் ஆசிரியர்கள் உட்பட அனைத்து அரசுப் பணியாளர்களுக்கும் பொருந்தும். இதன் மூலம் சுமார் 10 இலட்சம் பணியாளர்கள் பயன்பெறுவார்கள்.

இவ்வாறு அகவிலைப்படி உயர்வு அளிப்பதால், அரசுக்கு ஆண்டுக்கு ரூ.71.32 கோடி கூடுதல் நிதிச்சுமையும், நடப்பு நிதியாண்டுக்கு (1993-93) ரூ.47.55 கோடி நிதிச் சுமையும் ஏற்படும்.

1993 ஜூலை 1-ஆம் தேதி முதல் நிலுவையிலுள்3 அகவிலைப்படி உயர்வு உடனடியாகப் பணமாக வழங்கப்படும்.

இதேபோல், ஓய்வூதியம் பெறுவோர் மற்றும் குடும்ப ஓய்வூதியம் பெறுவோருக்கும் மத்திய அரசின் ஓய்வூதியம் பெறுவோருக்கு அளித்துள்ளவாறு 1.7.1993 முதல் அகவிலைப்படி உயர்வு அளிக்கப்படும். அதன்படி ரூ.1,750 வரை ஓய்வூதியம் பெறுவோர் மற்றும் குடும்ப ஓய்வூதியம் பெறுவோருக்கு, தற்போது 92 சதவிகிதம் அகவிலைப்படி பெறுவதற்குப் பதிலாக, 97 சதவிகிதம் அகவிலைப்படி உயர்வு அளிக்கப்படும். ரூ.1,750-க்கு மேல் 3,000 வரை ஓய்வூதியம் பெறுவோர் தற்போது, பெற்று வரும் 69 சதவிகித அகவிலைப்படிக்கு மாறாக, 73 சதவிகிதத் திருந்திய அகவிலைப்படி பெறுவார்கள். ரூ.3,000-க்கு மேல் ஓய்வூதியம் பெறுவோர், தற்போது 59 சதவிகித அகவிலைப்படி பெறுவதற்குப் பதிலாக 63 சதவிகித திருந்திய அகவிலைப்படி பெறுவார்கள்.

இதனால் மாதத்திற்குக் குறைந்தபட்சம் ரூ.19-ம், உயர்ந்தபட்சம் ரூ.156-ம் கூடுதல் பயன் கிடைக்கும்.

இந்தத் திருந்திய அகவிலைப்படி உயர்வு, உள்ளாட்சி நிறுவனம் மற்றும் அரசு உதவி பெறும் கல்வி நிறுவனங்களில் பணியாற்றி ஓய்வூதியம் பெற்று வருவோர் உட்பட அனைத்து ஓய்வூதியம் பெறுவோருக்கும், குடும்ப ஓய்வூதியம் பெறுவோருக்கும் பொருந்தும்.

இதனால், 2.67 இலட்சம் ஓய்வூதியம் பெறுவோரும், குடும்ப ஓய்வூதியம் பெறுவோரும் பயனடைவர். ஓய்வூதியம் பெறுவோருக்குக் கூடுதல் அகவிலைப்படி அளிப்பதன் மூலம், அரசுக்கு ஆண்டு ஒன்றுக்கு கூடுதலாக ரூ.10.90 கோடி நிதிச் சுமையும், நடப்பு நிதியாண்டுக்கு ரூ.7.26 கோடி நிதிச் சுமையும் ஏற்படும்.

## தமிழரசு

**16.11.93 இதழ்**
**மதுரை மாவட்டச் சிறப்பிதழாக மலர்கிறது!**

- பக்கத்துக்குப் பக்கம் பயன்தரும் பல்சுவை விருந்து!
- கண்கவர் படங்கள்! கவின்மிகு கட்டுரைகள் கவிதைகள்!
- அரசு ஆற்றும் அரும்பணிகளின் அரிய தொகுப்பாக வெளி வருகிறது!

தமிழரசு

படிக்க-பயன்பெற-பாதுகாக்க

ஆசிரியரும் வெளியிடுபவரும்: இரா. சம்பத், இ.ஆ.ப., தமிழ்நாடு அரசு செய்தி-மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002. தொலைபேசி எண்: 568926, 568927

# எளிமையானவை! நேர்த்தியானவை!
# மேன்மை மிகுந்தவை!
# தோற்றம் அளிப்பவை!



கோ-ஆப்டெக்ஸ்
தமிழ்நாடு கைத்தறி

* பருத்தி, பாலியஸ்டர், பட்டுச் சேலைகள்.
* பருத்தி, பாலியஸ்டர் சர்ட்டிங்ஸ், பட்டுத் துணிகள்.
* பருத்தி, பாலியஸ்டர் சூட்டிங்ஸ்.
* லுங்கிகள், துவாலைகள். வேட்டிகள்.
* படுக்கை விரிப்புகள், அலங்காரத் துணி வகைகள்.

அருகாமையில் உள்ள கோ-ஆப்டெக்ஸ்
விற்பனை நிலையத்தை அணுகவும்.

பதிவு எண். M. 8676
Licence No. TN/MS(C)/PP-23.



